பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 26 புதன்கிழமை 11.11.2020 கதிர் 06

**இனி இது ரகசியம் அல்ல!**

நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படுவதற்காக நடாளு மன்றம் நாளை வியாழக்கிழமை காலை மணி முதல் சுமார் பத்து மணி நேரம் கூடவிருக்கின்றது. இரவு 8 மணி வரை அலுவல்கள் நடக்கும். ஆனால் இம்முறை ஒரு வித்தியாசம். பக்கம் 02

# 41 பேரைப் பலியெடுத்தது கொரோனா; நேற்றும் 430 பேருக்குத் தொற்று உறுதி

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் மரணங்கள் 41 ஆக உயர்வடைந்துள்ளது. நேற்று 5 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. இந்த மரணங்களில் ஒரு பெண்ணும், 4 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். உயிரிழந்த ஆண்களில் ஒருவர் அடையாளம் காணப்படாதவர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று மாத்திரம் 430 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பேலியகொடை கொத்தணியுடன் தொடர்புடையவர்களாவர்.

அதற்கமைய நாட்டில் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 14 ஆயிரத்து 715 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 9 ஆயிரத்து 537 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன் 5 ஆயிரத்து 137 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுப் பதிவான மரணங்களில் 41ஆவது மரணம் பக்கம் 02

# சாக்குப்போக்குக் காரணம் வேண்டாம்! முழு நாட்டையும் உடன் முடக்குங்கள்!!

## பி.சி.ஆர். சோதனையை விஸ்தரியுங்கள் கோட்டாபயவிடம் சஜித் இடித்துரைப்பு

கொழும்பு, நவம்பர் 11

சாக்குப்போக்குக் காரணங்களைத் தெரிவிக்காது முன்னறிவித்தல் வழங்கி முழு நாட்டையும் குறைந்தது 14 நாள்களுக்காவது முடக்கும் உத்தரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்க வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்துகிறார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ. பக்கம் 02



### கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின்

# ஜனாஸாக்களை அடக்கம் செய்வது குறித்து இன்னமும் முடிவு இல்லை

## கைவிரித்தது சுகாதார அமைச்சு

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்யும் தற்போதைய நடைமுறையில் மாற்றங்களை மேற்கொள்வது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார பக்கம் 02



# கண்டியில் மேலும் 3 இடங்கள் முடக்கம்

கண்டி மாவட்டம், கலகெதர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புரேகம பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

அந்தப் பிரதேசத்தில் 5 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதைத் தொடர்ந்து கும்புரேகம, தீப்பலாகொட, ஏத்தமுல்ல ஆகிய இடங்களே முடக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் முடக்கப்பட்டிருந்த மூன்று கிராமங்கள் இன்று விடுவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்.மாவட்டத்தில் இராஜகிராமம், குருநகர் மற்றும் திருநகர் ஆகிய மூன்று கிராமங்களிலும் பக்கம் 02

## சீனிக்கு உச்சவிலை ரூ.85 வெளியானது வர்த்தமானி

வெள்ளைச் சீனிக்கு உச்சபட்ச விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டு, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் அதி விசேட பக்கம் 02




# திரியாயில் தமிழரின் காணிகள் மீதான ஆக்கிரமிப்புக்கு இடைக்காலத் தடை

## கிழக்கு மாகாண மேல்நீதிமன்றம் நேற்று விதித்தது தமிழ் சட்டத்தரணிகள் அமைப்புக்கு முதல் வெற்றி

(ந.லோகதாயளன்)

திருகோணமலை, நவ. 10

திருகோணமலை மாவட்டம் திரியாய் மற்றும் தென்னைமரவாடிப் பகுதிகளில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளை அடாத்தாகப் பிடுங்கி, பௌத்த ஸ்தலங்கள் அமைப்பதற்கு என்ற பெயரில் அவற்றுக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு எடுத்த நடவடிக்கைக்கு திருகோணமலையில் அமரும் கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கின்றது. பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெரும்பாலும் இந்த அமர்வுகளுக்கு பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்களாம். ஏன் தெரியுமா? கடந்த தடவை இருபதாவது திருத்தம் தொடர்பான விவாதத்தின் போது செய்தி சேகரிக்க வருகை தந்திருந்த பத்திரிகையாளர்களில் ஐந்துக்கு மேற்பட்டோருக்கு பின்னர் கொரோனாத் தொற்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதல்லவா? அதனாலாம்.

அப்படி என்றால் நாடாளுமன்றச் செய்திகள் இனி வெளிவராவா? ஊடகவியலாளரின்றி எப்படிச் செய்தி வெளியாகும்?

நாடாளுமன்றப் பேச்சுகளின் நேரடி ஒளிபரப்பு மட்டும் நடக்கும். அதைப் பார்த்து ஊடகங்கள் செய்தியை எழுதிக் கொள்ளட்டும் என்றும் சமாதானம் கூறப்படுகின்றது.

ஆனால், அப்படிச் செய்தாலும் ஒரு சிக்கல். நேரடி ஒளிபரப்பில், நாடாளுமன்றில் பேசுபவர் என்ன மொழியில் பேசுகின்றாரோ அந்த மொழியில்தான் அது ஒளிபரப்பாகும். சமநேர மொழிபெயர்ப்பு ஒளிபரப்பில் இடம்பெறாது.

நாடாளுமன்ற அமர்வுகள் பெரும்பாலும் சிங்களத்தில்தான் நடக்கும். இதனால் தமிழ், ஆங்கில ஊடகவியலாளர்கள் – குறிப்பாக வெளிநாட்டு செய்தி நிறுவனங்களின் ஊடகவியலாளர்கள் – பெரிதும் பாதிக்கப்படுவர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேநேரம் தமிழில் எங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதும், சமநேர மொழி பெயர்ப்பு மூலம் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு கிட்டுவதும் தடைப்பட்டு போகும். அதனால் தமிழ் எம்.பிக்களின் உரை சிங்கள ஊடகங்களில் நிரந்தரமாக இல்லாமல் போகும் – சாணக்கியன் போன்று சிங்களத்தில் பேசுவோரின் உரைகளைத் தவிர.

சரி, ஊடகவியலாளர்களுக்கு தொற்ற ஏற்பட்டமையால் அவர்களுக்குக் கதவடைப்பு. இனிமேல் சமநேர மொழிபெயர்ப்பைச் செய்யும் பணியாளர்களுக்கோ அல்லது நாடாளுமன்றின் வேறு ஊழியர்களுக்கோ தொற்று ஏற்பட்டமை அறியப்பட்டால் அவர்களையும் இனி வர வேண்டாம் என்று அறிவிப்பார்களா?

அதையும் தாண்டி, ஒரு சில எம்.பிக்களுக்கும் தொற்று ஏற்பட்டால் நாடாளுமன்ற அமர்வையே நிறுத்தி விடுவார்களா?

தெரியவில்லை.

என்றாலும் இணைய வழி ஊடாக – 'சூம்' முறையிலும் கூட – நாடாளுமன்ற அமர்வுகளை நடத்தலாம்.

ஆனால் இப்படி நடத்தினால் நாடாளுமன்றச் சர்ச்சைகள், குழப்பங்கள், சபை அட்டகாசங்கள் போன்றவற்றை அறிவதற்கே இடமில்லாமல் போய்விடுமே, சபை அமர்வே சுவாரஸியமில்லாததாகிவிடுமே என்று விசனப்படுகின்றார் மூத்த நாடாளுமன்றச் செய்தியாளர் ஒருவர்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

★ ★ ★

அமெரிக்காவின் புதிய உப ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுள்ள கமலா ஹரிஸ் அம்மையார் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பது எல்லோரும் அறிந்ததுதான். அவரின் தாய் வழிப்பேரனும் பேத்தியாரும் யாழ்ப்பாணம் மானிப்பாயையும் மட்டக்களப்பையும் சார்ந்தவர்கள் என்ற சாரப்பட அன்பர் ஒருவர் தமக்குக் கிடைத்த தகவலை எனக்கு அனுப்பி வைக்க, நானும் அதனைப் பிரசுரித்தேன். வாசர்கள் வாசித்திருப்பீர்கள். அவர்கள் இருவரும் இந்தியாவை – தமிழகத்தை – சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிக்கும் 'விக்கிபீடியா' புதிய தகவல் தொகுப்பை முன்னாள் வடக்கு மாகாண முதல்வரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் அனுப்பி வைத்துள்ளார்.

தகவலைத் தெளிவுபடுத்திய அவருக்கு நன்றி. அவர் தெரிவித்த இத்தகவல் வாசர்களுக்கு!

– மின்னல் –

## 41 பேரைப் பலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

ராகமை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். குறித்த நபர் வீட்டிலேயே உயிரிழந்துள்ள நிலையில், ராகமை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. புற்றுநோயால் நீண்ட நாள் பாதிக்கப்பட்டிருந்த அவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டமையே மரணத்துக் கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்திகள் 7,8,12 ஆம் பக்கங்களில்)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமுலில் இருந்த முடக்கல் நிலை இன்று காலையில் இருந்து நீக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்

அண்மையில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இராஜகிராமம், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குருநகர், திருநகர் ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பேலியகொடை மீன் சந்தைக்குச் சென்று வந்ததன் காரணமாக சிலர் கொரொனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருந்தார். குறித்த தொற்றாளர்கள் அக்கிராமங்களில் நடமாடி இருந்ததால் அக்கிராமங்களிலிருந்து யாரும் வெளியே செல்லாதவாறும், அக்கிராமங்களுக்குள் புதிதாக எவரும் உள்நுழையாதவாறும் சுகாதாரப் பிரிவினரால் முடப்பட்டிருந்தது.

தற்போது அந்தக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்படி புதிதாக எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் இன்று காலையிலிருந்து குறித்த மூன்று கிராமங்களும் முடக்க நிலையிலிருந்து நீக்கப்படுகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

## சீனிக்கு உச்சவிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனிக்கு ஆகக் கூடுதலான சில்லறை விலைகள் வருமாறு:–

பொதியிடப்பட்டது ரூ.90 ஆகவும், பொதியிடப்படாதது ரூ.85 ஆகவும், இறக்குமதியாளரின் மொத்த விற்பனை விலை ரூ.80.

## ஜனாஸாக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமைச்சின் பேச்சாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மண்ணின் நிலைமை மற்றும் கொரோனா வைரஸின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப காரணங்களைக் கருத்தில் எடுத்த பின்னரே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உடல்களைத் தகனம் செய்யும் முடிவை எடுத்தார் எனவும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இந்தத் தருணத்தில் அதனை மாற்றுவதற்கான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனச் சுகாதார அமைச்சின் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, அனைவரும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றினால் இலங்கையில் பாரிய பேரிடரைத் தவிர்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நாட்டில் பல தற்கொலைகள் இடம்பெறுவது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், கொரோனா குறித்து எவரும் அச்சப்படத் தேவையில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# மாமனிதர் ரவிராஜின் நினைவேந்தல் நிகழ்வு


அணியினர் காலை 9 மணிக்கும், சசிகலா ரவிராஜ் தலைமையிலான மற்றுமோர் அணியினர் காலை 9.30 மணிக்கும் நடத்தியிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று சாவகச்சேரியில் சாவகச்சேரியில் நடைபெற்றது.

மாமனிதர் ரவிராஜின் உருவச் சிலை அமைந்துள்ள சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு முன்னால் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அன்னாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கபட்டடு – நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு – மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வை ஒரு

# துமிந்த சில்வா உட்பட முக்கிய புள்ளிகள் சிறைக்கூடத்தில் இருந்து ஓய்வறைக்கு?

கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முக்கிய புள்ளிகள் சிலர் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்பு மிகுந்த ஓய்வறைப் பிரிவுக்கு மாற்றப்பட் டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, தங்காலை பிரதேச சபை முன்னாள் தலைவர் சம்பத் வித்தாண பத்திரன, விளக்கமறியல் கைதி சட்டத்தரணி அஜித் பிரசன்ன உள்ளிட்ட முக்கிய சிலர் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறை வைத்தியசாலை என்கின்ற ஓய்வுப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கைதிகள் 200 இற்கும் மேற்பட்டவர்கள் மஹர சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் வெற்றிடம் ஏற்பட, மேற்படி உறுப்பினர்கள் அங்கே மாற்றப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அரச மேல் மட்டத்திலிருந்து வந்த கட்டளைக்கு அமையவே இந்த நடவடிக்கையை சிறைச்சாலை தலைமையகம் உடன் மேற்கொண்டுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறை மற்றும் போகம்பர சிறையில் இதுவரை 108 கொரோனா நோயா ளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திரியாயில் தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்த விடயத்தை ஒட்டி, தமிழ் மக்களுக்கென அமைக்கப்பட்டுள்ள மக்களுக்கான நீதி என்ற சட்டத்தரணிகள் கூட்டின் நேற்றைய முதல் நடவடிக்கை வெற்றிகரமாக ஆரம்பமாயிருக்கின்றது.

திரியாயிலும், தென்னைமரவாடியிலும் இவ்வாறு அரசினால் தமது காணிகளை இழந்த இருபது பேர் சார்பில் தடையாணை பிறப்பிக்கக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை நேற்றுக்காலை பரிசீலனைக்கு எடுத்த கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், மேற்படி இருபது பேரின் காணிகளைக் கட்டுப்பாட்டில் எடுக்கும் அரச வர்த்தமானிக்கு உடனடியாக இடைக்கால தடை உத்தரவு வழங்கினார்.

எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பித்து எதிர்வரும் 23 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகும்படி கட்டளை வழங்கிய அவர் அத்திகதி வரை இந்த இடைக்காலத் தடை நீடிக்கும் என்றும் அறிவித்தார்.

சட்டத்தரணி செல்வி பிரசாந்தினி உதயகுமாரின் அனுசரணையுடன் சட்டத்தரணி கேசவன் சயந்தன் நேற்றுக் காலை மன்றில் செய்த சமர்ப்பணங்களை செவிமடுத்த பின்னர் இந்த உத்தரவை அவர் விடுத்தார்.

திருகோணமலை மாவட்டம் திரியாய், தென்னைமரவாடிப் பிரதேசங்களில் சுமார் 340 ஏக்கர் நிலப்பரப்ரபை பௌத்த ஆலயங்களுக்கு முப்பது வருட கால குத்தகைக்கு அளித்தல் என்ற பெயரில் ஒரு வர்த்தமானி அறிவித்தலை அரசு விடுத்தது.

02.10.2020 திகதியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தலில் மேற்படி காணிகள் அமைந்துள்ள பகுதிகளை சமய வழிபாட்டு நோக்கங்களுக்காக சப்த நாக பப்பத வன செனசுன நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு' வழங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவை பெரும்பாலும் நூற்றாண்டுக்கு மேற்பட்ட உறுதி முடிப்புகளுடன் கூடிய தமிழர்களின் பூர்வீகக் காணிகள் என்று கூறப்படுகின்றன.

இதில் தமிழர்களின் காலாதிகால வயல் நிலங்களும் அடங்குகின்றன.

இந்த வர்த்தமானி அறிவித்தலை அடுத்து காணிக்காரர்கள் தமது வயல்களுக்குள் இறங்கத் தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து, தென்னமரவாடியைச் சேர்ந்த மூன்று காணி உரிமையாளர்கள் சார்பிலும், திரியாயைச் சேர்ந்த 17 காணி உரிமையாளர்கள் சார்பிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட் டன.

அந்த வழக்குகளை நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்த கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் மேற்படி இடைக்காலத் தடையை விதித்தது.

புதிதாக உதயமாகியுள்ள மக்களுக்கான நீதி சட்டத்தரணிகள் அமைப்பின் முதல் வழக்கு இது.

அந்த அமைப்பின் சார்பில் சட்டத்தரணி சயந்தன் வாதாடி இந்த இடைக்கால உத்தரவைப் பெற்றார்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்து வழக்கு நடவடிக்கைகளைப் பார்வையிட்டார். ஆனால் வாதங்களில் அவர் சம்பந்தப்படவில்லை.

## சாக்குப்போக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கொரோனா வைரஸ் தொற்றின் பேராபத்து மையமாக மேல் மாகாணம் விளங்குகின்றது. இந்தநிலையில், இம்மாகாணத்தை 10 நாள்கள் மட்டும் முடக்கியிருந்த அரசு, அதை மீண்டும் திறந்துவிட்டுள்ளது.

இதனால் கொரோனாத் தொற்றுப் பரவல் நாடெங்கும் பரவும் அபாயம் உள்ளது. தொற்றாளர்களின் எண்ணிக்கையும் உயிரிழப்பு எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன.

இதனைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட வேண்டும். சாக்குப்போக்குக் காரணங்களைத் தெரிவிக்காது, முன்னறிவித்தல் வழங்கி, முழு நாட்டையும் குறைந்தது 14 நாள்களுக்காவது முடக்கும் உத்தரவை ஜனாதிபதி வழங்க வேண்டும். அந்தக் காலப்பகுதிக்குள் நாடெங்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளையும் முன்னெடுக்க வேண்டும் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனா உயிரிழப்பை மறைக்கின்றது அரசு!

## ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசாங்கம் மறைக்கின்றதென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஹரின் பெர்னாண்டோ மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

நாட்டின் எதிர்க்கட்சி என்ற வகையில், இந்த தொற்றுநோய் சூழ்நிலையில், மக்கள் முகங்கொடுத்த பிரச்சினைகள் தொடர்பாகத் தெரிவிப்பதற்கு, ஓர் அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு மாத்திரம், ராஜகிரிய, கம்பஹா, குருநாகல் ஆகிய பகுதிகளில், 4 மரணங்கள் பதிவாகியிருந்தன. இவ்வாறு உயிரிழந்தவர்களின் மரணச் சான்றிதழ்கள் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளன.

அந்த இறப்புக்கு, கொரோனா வைரஸ்தான் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, நாட்டை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து காப்பதற்கான முயற்சியை, அரசாங்கம் கைவிட்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

மேலும், அரசாங்கத்தின் கவனமின்மை நாட்டை பேரழிவுக்குள் இட்டுச் செல்லும்.- என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அதிகூடிய மழைவீழ்ச்சி வவுனியாவில் பதிவானது!

வவுனியாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை முதல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை வரையான 24 மணி நேரத்துக்குள் 138.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவவுனியாவளிமண்டலவியல் அவதானிப்பு நிலையை பொறுப்பதிகாரி சதானந்தன் தெரிவித்துள்ளார் .

இந்த வருடம் ஜனவரி தொடக்கம்நேற்றுவரையான காலப்பகுதியில்886.8மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இருந்தும் இந்த வருடத்துக்குள் இந்த மாதம் 24 மணிநேரத்திற்குள் பெய்த மழையே அதி கூடிய மழைவீழ்சியாகப் பதிவாகியுள்ளது.

அதாவது நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்று காலை 8.30 மணியரையான 24 மணி நேரத்திற்குள் வவுனியாவில் 138.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இது கடந்த வருடத்தில் மழை வீழ்ச்சியை விடவும் அதிகளவான மழை வீழ்ச்சியாக இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் பதிவாகியுள்ளது.

மழையுடனானகாலநிலை நீடிப்பதுடன் மாலை வேளைகளில் பெய்துவரும் மழை தொடர்ச்சியாக இருக்காது எனவும், ஓரிரு நாள்களே மழை தொடர்ச்சியாக பெய்யும்எனவும், இருந்தும் மழையுடன் இடி மின்னல் தாக்கம் அதிகமாக காணப்படும் எனவும், எனவே பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறும் வவுனியா வளிமண்டலவியல்அவதானிப்பாளர்மேலும் தெரிவித்துள்ளார்.

# தாய் மற்றும் இரு குழந்தைகளுக்கு மாரவிலவில் கொரோனாத் தொற்று!

மாரவில – மாவில பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் இரண்டு குழந்தைகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாத்தண்டிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

சிவில் பாதுகாப்புச் சேவையில் பணியாற்றும் பெண்ணுக்கும் அவருடைய 6 மற்றும் 2 வயது குழந்தைகளுக்குமே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண்ணின் கணவரும் இதற்கு முன்னர் கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்டுள்ளமையுடன், அவர் சிவில் பாதுகாப்பு பிரிவில் சாரதியாக பணியாற்றியவர் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை , நுவரெலியா – மஸ்கெலியா காட்மோர் தோட்டத்தில், பிரொக்மோர் பிரிவில் மேலும் ஒரு கொரோனா வைரஸ் தொற்றாளர் நேற்று (செவ்வாய்க்கிழமை) அடையாளம் காணப்பட்டுள்ளார் என சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பிள்ளையான் மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ.11

நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

மேல் நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் 24 ஆம் திகதிவரை வழக்கை ஒத்திவைத்தார்.

இதேவேளை மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கவேண்டாம் என அரசதரப்பு சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட வாதமும் நிராகரிக்கப்பட்டதுடன் சிறைச்சாலை ஆணையாளர் அனுமதி வழங்கினால் அவர் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியும் எனவும் நீதிபதி இதன்போது தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர்மாதம்25ஆம்திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015 ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

# ரிஷாத்துக்குத் தொடர்ந்தும் விளக்கமறியல் நீடிப்பு!



அரச நிதியை முறைகேடாகச் செலவிட்டமை மற்றும் தேர்தல் சட்டத்தை மீறியமை போன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 19 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவரை நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க உத்தரவிடப்பட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு தினத்தில், புத்தளம் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்த மக்களை, அரச பஸ்கள் ஊடாக மன்னார் பகுதிக்கு அழைத்து சென்றுவாக்களிக்கவைத்தசம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசபஸ்களில்மக்களை அழைத்து சென்றமையின் ஊடாக, பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை, அரச நிதியை முறைகேடாக செலவிட்டமை மற்றும் தேர்தல் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட மூவரைக் கைது செய்யுமாறு சட்ட மா அதிபர் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதையடுத்து, 6 பொலிஸ் குழுக்கள் ரிஷாத் பதியுதீனை கைது செய்வதற்காக மன்னார், கிழக்கு மாகாணத்தில் உறவினர் வீடுகளிலும் மற்றும் கொழும்பில் உள்ள அவரது வீடுகளிலும் சோதனைகளை நடத்தியிருந்தன.

எனினும், ரிஷாத் பதியுதீன் தலைமறைவாகி இருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிஷாத் பதியுதீன் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் ஒக்ரோபர் 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

# சமூக இடைவெளி பேணாத குற்றம்: இதுவரை 125 பேர் கைதாகியுள்ளனர்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, நவ.11

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாத குற்றச்சாட்டின் கீழ் இதுவரை 125 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனிமைப்படுத்திய பகுதிகளில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஆஸ்திரேலியர்களை ஆச்சரியப்படுத்திய இலங்கையைச் சேர்ந்த 11 வயது சிறுமி

இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த 11 வயது சிறுமியான ஜார்ஜியா, ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 'ஜூனியர் மாஸ்டர் செஃப் 2020' போட்டியில் வெற்றியடைந்துள்ளார்.

இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் இருந்தே ஜார்ஜியா, தனது பாட்டியிடமிருந்து கற்றுக்கொண்ட சமையல் மூலம் நடுவர் மன்றத்தை ஆச்சரியப்படுத்தி வந்தார்.

இந்த நிகழ்வு ஆஸ்திரேலியாவில் மிகவும் பிரபலமானதுடன் சமூக வலைத்தளங்களிலும் வைரலாகி வருகின்றது.

மேலும் இந்த இறுதி சமையல் போட்டியில் ஜார்ஜியா, ஏனைய இரண்டு போட்டியாளர்களுடன் போட்டியிட்டு வெற்றியடைந்துள்ளார்.

குறித்த 11 வயது சிறுமி, எப்படி இத்தகைய சுவையான உணவைத் தயாரிக்கின்றார் என நடுவர் மன்றத்தினர் ஒவ்வொரு முறையும் மிகவும் ஆச்சரியத்துடன் கருத்துக்களை வெளியிட்டு இருக்கின்றார்கள்.

மேலும், அவரது தனித்துவமான திறன் ஆஸ்திரேலியா மற்றும் பிற வெளிநாடுகளையும் இலங்கையின் உணவு மற்றும் பானங்கள் மீது அதிக ஆர்வத்தைத் தற்போது ஏற்படுத்தியுள்ளது.



கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் நிலைமை மாறிய பின்னர் இலங்கை சுற்றுலாத் துறைக்கு இந்த நிகழ்வு நல்ல ஆதரவாக அமையும் என பெரும்பாலான ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்ணியமான அரசியல் செய்ய தெரியாத டொனால்ட் ட்ரம்ப்

நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், அங்கு வலிமையும் செல்வாக்கும் மிக்கவராக கருதப்பட்ட அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றார். அது அவருக்கு எதிர்பாராத பேரதிர்ச்சியைத் தந்திருக்கின்றது என்பது தெளிவானது.

அதிபர் ட்ரம்பை அமெரிக்க மக்கள் ஏன் இந்தத் தேர்தலில் நிராகரித்தனரோ அதனைத் தேர்தலின் பின்னரான தமது நடவடிக்கை மூலமும் அவர் தொடர்ந்து நிரூபித்து, நியாயப்படுத்தி வருகின்றார் என்றே கூறவேண்டும்.

ட்ரம்பின் தோல்விக்கான காரணத்தை ஏற்கனவே இப்பத்தியில் கோடி காட்டியிருந்தோம்.

அமெரிக்க மக்கள் எதிர்பார்க்கின்ற Decent politics (கண்ணியமான அரசியல்) அவரிடம் கொஞ்சம் கூட இல்லை.

எதற்கெடுத்தாலும் மிதப்போடும் திமிரோடும் பேசும் அவரது பண்பு, மென்மையான – நாசூக்கான – நாகரிகமான – அணுகுமுறைகளைக் கொண்ட அமெரிக்க மக்கள் மனதில் நல்ல மனப்பதிவை ஏற்படுத்தவேயில்லை. மாறாக, தமது 47 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில் எப்போதுமே சிரித்த முகத்துடன் – சீறி விழாமல் – மென்மையாக – நாசூக்காக – காரியமாற்றும் ஜோ பைடனை அமெரிக்க மக்களுக்குப் பிடித்துப் போனமை ஆச்சரியத்துக்குரியதன்று.

டொனால்ட் ட்ரம்பின் கண்ணிமற்ற அரசியலின் உச்சக்கட்டமாக, தமது தோல்வியை ஏற்க மறுத்து அடம் பிடித்துச் செயற்படும் சிறு பிள்ளைத்தனமான அரசியல் அவரிடம் இருந்து இப்போது வெளிப்படுகின்றது.

அமெரிக்க அதிபராகத் தெரிவு செய்யப்படுபவர், அந்தத் தெரிவு நடந்ததுமே இலக்கம் 1600, பென்ஸில்வேனிய அவென்யூவில் இருக்கும் வெள்ளை மாளிகையில் குடியேறிவிட முடியாது.

அதற்கு அவர் பல படிகளைத் தாண்ட வேண்டும். சுமார் இரண்டரை மாதங்கள் காத்திருக்க வேண்டும்.

நவம்பர் 03ஆம் திகதி தேர்தல் நடைபெற்று அடுத்த ஓரிரு தினங்களில் முடிவுகள் அறிவிக்கப்பட்டாலும் புதிய அதிபர் அதற்குப் பின்னர் வரும் ஜனவரி 20ஆம் திகதி பிற்பகலில்தான் பதவியேற்க முடியும்.

தேர்தல்கள் முடிந்து 77 நாள்கள் வரை புதிதாகத் தெரிவு செய்யப்படும் அதிபர் காத்திருக்க வேண்டியிருக்கும்.

அடுத்து வரும் தமது புதிய நிர்வாகத்துக்கான ஏற்பாடுகள், தயாரிப்புகளில் அவர் இந்தக் காலத்தில் ஈடுபட்டாலும் ஜனவரி 20 வரை உத்தியோகபூர்வ செல்வாக்கு ஏதும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு இருக்காது.

இதனை, 'ஆட்சி ஒப்படைப்புக்கான நிலைமாறு காலம்' என்று அழைப்பர்.

இந்த நிலைமாறுகால ஆட்சி அதிகாரத்திலேயே புதிய ஜனாதிபதி ஜோ பைடனுக்கு, தோற்றுப் போன டொனால்ட் ட்ரம்ப் அலுப்புக் கொடுக்கின்றார் எனத் தெரிகின்றது.

தேர்தல் வெற்றி, முறைகேடான வகையில் தன்னிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டதாகப் புலம்புகின்றார் ட்ரம்ப்.

அதற்காக அவர் பல நீதிமன்றங்களை நாடவிருக்கின்றாராம்.

எந்தெந்த மாநிலங்களில் ஜோ பைடன் வெற்றி பெற்றார் எனக் கூறப்பட்டதோ அங்கெல்லாம் வாக்குப் பதிவுகளில் முறைகேடு நடந்துள்ளன என ட்ரம்ப் தரப்புக் குற்றம் சுமத்துகின்றது. ஆனால் அதற்கான ஆதாரங்கள் எவற்றையும் அவர்கள் முன்வைக்கவேயில்லை.

எனினும், அவரின் தரப்பு அதிகாரிகள் பலர் இது விடயமாக நாட்டின் சிறந்த சட்டத்தரணிகளுடன் தொடர்பில் இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

தேர்தல் சமயத்தில், பல மாநிலங்களில் கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக மக்களை வாக்குச் சாவடிகளுக்கு திரண்டு வந்து வாக்களிக்காமல், வீட்டிலிருந்தபடியே மின்னஞ்சலில் வாக்களிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தேர்தல் அதிகாரிகளின் இந்தப் பணிப்பை ஏற்க மறுத்த ட்ரம்ப், தனது வாக்காளர்களை நேரில் சென்ற வாக்களிக்கும்படி கோரினார். ஆனால் கணிசமான மக்கள் அதனை நிராகரித்தனர். மின் அஞ்சல் மூலம் பெருமளவு வாக்குகள் ஜோ பைடனுக்கு விழுந்தன.

அந்த மின்னஞ்சல் வாக்குகளை நிராகரிக்கச் செய்வதன் மூலம் அந்த மாநிலங்களில் வெற்றி பெற்றவராகத் தான் வரமுடியும் எனக் கருதும் ட்ரம்ப் அப்படி நேர்ந்தால் தாமே தொடர்ந்த அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகத் தொடரமுடியும் எனவும் கனவு காண்கின்றார்.

அவரின் வழக்குகள் அந்தந்த மாநிலங்களின் சமஷ்டி நீதிமன்றங்களில் விசாரணைக்கு வரலாம்.

ஆனால் அதற்காக, இப்போதைய தேர்தல் முடிவுகள் நிறுத்தப்படவோ, அல்லது உடனடியாகச் செல்லுபடியற்றவையாக்கவோ சந்தர்ப்பம் இல்லை.

சரியோ, பிழையோ அடுத்த 70 நாள்களுக்கு – ஜனவரி 20 மாலை வேளை வரை – அவர்தான் ஜனாதிபதி.

அதற்கிடையில் நீதிமன்றங்களுக்குப் போகும் திருக்கூத்துக்களை அவர் தொடர்ந்து அரங்கேற்றுவார்.

அதனால், ஜனவரி 20 வரையான 'நிலைமாறுகால ஆட்சிக் காலம்' குளறுபடி மிகுந்ததாவே இருக்கப் போகின்றது.

ட்ரம்பின் குழப்பங்களை, ஜனவரி 20 வரை அதிகாரம் இல்லாமல் இருக்கப் போகும் ஜோ பைடன் எப்படிச் சமாளிப்பார்? இனிமேல் தான் அது தெரியவரும்.

# நாட்டை முடக்கும் தீர்மானத்தை ஒருபோதும் அரசு எடுக்கமுடியாது!

### அடித்துக் கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ



நாட்டை முடக்கும் தீர்மானம் அரசாங்கத்தால் எடுக்க முடியாது. அதனை சுகாராத அமைச்சுத் தான் தீர்மானிக்க வேண்டும் எனவும், அவர்கள் வழங்கும் விடயங்களை வைத்துக் கொண்டு தான் அரசாங்கம் முடிவெடுக்கும் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற நிகழ்வையடுத்து, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் அதிகமாக கொவிட் பரம்பலுக்கு உள்ளான தென்பகுதியில் இருந்து அமைச்சர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்கிற போது தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என்பது தொடர்பாகக் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த நாமல், அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற அதேவேளை, நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த வேண்டும் என்பதுடன், அதற்கான நடவடிக்கைகளை செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் கொவிட்19 இருந்தது. அவர்கள் எங்களை விட மிக மோசமாக பாதிக்கப்பட்டனர். ஆனாலும் இப்போது அவர்கள் வாழ்க்கை முன்னேறிக்கொண்டுதான் செல்கிறது. நாங்களும் இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பொதுமக்களோ சுகாதார தரப்பினரோ பொருளாதாரம் முடங்குவதை விரும்பவில்லை. ஆனால் எதிர்க்கட்சியினர் விரும்புகிறார்கள் எனத் தெரிவித்த நாமல், பொருளாதாரத்தை முடக்குவதுதான் அவர்கள் நோக்கமாக இருக்கிறது என்றும், நாடு முடக்கப்பட்டாலும் அவர்கள் வெளியில் நடமாடுவார்கள் என்பதுடன் அவர்கள் கருமங்களை அவர்கள் செய்வார்கள். என்றும் குறிப்பிட்டார்.

மேலும் இதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள் எனத் தெரிவித்த அவர், நாங்கள் அதை விரும்பவில்லை என்றும் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லவே தாங்கள் விரும்புகிறோம் என்றும் தெரிவித்தார்.

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வடக்கில் வசதிகள் ஏற்படுத்த வேண்டும்!



### சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து

வடமாகாணத்தில் உள்ள விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியாவில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற 'கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம்' தொடர்பான கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்–

வடமாகாணத்தில் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட விசேட தேவைக்குட்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். குறிப்பாக இவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் இவர்களுக்கு ஏற்றவாறான வசதி, வாய்ப்புக்கள் காணப்படவில்லை.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு வடமாகாணத்தில்உள்ள 12 கல்விவலயங்களிலும் ஒரு கல்வி வலயத்தில் ஒரு பாடசாலை கட்டடம் என்ற ரீதியில் அமைக்க வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வேண்டுகோள் விடுத்திருத்தார்.

இதனையடுத்து இளைஞர் விவகாரம் மற் றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் ஊடாக இதற்கான தீர்வு எட்டப்படும் எனத் தெரிவித்தார்.

# பதுளையில் வாகன விபத்து: ஒரு வயதுக் குழந்தை சாவு!

### நால்வர் படுகாயம்

பதுளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரு வயதுக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளதுடன், மேலும் நாவல்வர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) மாலை, பதுளை – மஹியங்கனை வீதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது –

வீதியில் பயணித்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்தே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களில் ஆறு வயது குழந்தையொன்றும், முச்சக்கர வண்டியின் சாரதியும், அவரது மனைவியும் வேறு ஓர் பெண்ணும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், விபத்தில் காயமடைந்தவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளமையுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் அரசு தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்!

## என்கிறார் ஞானசார தேரர்

கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தொடர்பாக அரசாங்கம், தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இன்று நாட்டுக்குள் அதிக பேசுபொருளாக கொரோனா விவகாரம் மாற்றமடைந்துள்ளது.

இந்த நிலையில், இந்த வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் உடல்களை எரிப்பதா – புதைப்பதா எனும் வாதமும் இடம்பெற்று வருகிறது. அத்தோடு, இறந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நாம் கடந்த காலங்களில் பல முஸ்லிம் அடிப்படைவாதம் தொடர்பாக எச்சரிக்கை விடுத்திருந்தோம். எனினும், கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, இதனை அந்த அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லை.

எம்மீது தான் குற்றஞ்சாட்டினார்கள். முஸ்லிம் வாக்குகளை சிதறடிக்க நாம் முயற்சிக்கிறோம் எனக் கூறினார்கள். இன்று அண்ணன் செய்த தவறையே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செய்துள்ளார். உடல்களை புதைப்பதா – எரிப்பதா என்பதல்ல எமது பிரச்சினை.



உலக சுகாதார ஸ்தாபனம் விடுக்கும் வேண்டுகோளுக்கு இணங்கவே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எனினும், கொரோனாவை ஒழிக்க யாரிடமும் ஒரு தெளிவான நிலைப்பாடு இல்லை. கொரோனா வைரஸ் எதனால் உருவானது என்பது தொடர்பாகக் கூட யாருக்கும் தெளிவில்லை.

இந்த நிலைப்பாடு நாட்டுக்கு நாடு மாற்றமடைகிறது. எமது நாட்டில் ஒரு சட்டம்தான் இருக்க வேண்டும். எமது நாட்டில் கொரோனாவால் உயிரிழந்த நபர்களை எந்தக் காரணம் கொண்டும், புதைக்கக் கூடாது என்று சுகாதார அமைச்சால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

உடல்களை புதைப்பதால், நீர் மாசுபடுகிறது என்று எச்சரிக்கையும் கடந்த காலங்களில் விடுக்கப்பட்டது. இந்த நிலையில்தான், முஸ்லிம்களின் உடல்களை புதைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் இந்த விடயத்தில் நாடகமொன்றைத்தான் அறங்கேற்றி வருகிறது. அரசாங்கம் சார்பாக இதற்கான விளக்கம் வெளியிடப்பட வேண்டும். எனத் தெரிவித்துள்ளார்.

# தீபாவளி பண்டிகை நிகழ்வை வீட்டிலிருந்து கொண்டாடுங்கள்

## வடமாகாண சுகாதார பணிப்பாளர்

தீபாவளிப் பண்டிகையை பொதுமக்கள் அனைவரையும் வீட்டிலிருந்து அமைதியாகக் கொண்ட வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் –

எதிர்வரும் 14 ஆம் திகதி இந்து மக்களால் தீபா வளிப் பண்டிகை கொண்டாடப்பட இருக்கின்றது.இந்தச் சூழ்நிலையில் நாட்டில் கொரோனா தொற்று மிக வேகமாகப்பரவி வருகின்றது. கொரோனா தொற்று நோயால் பல இறப்புகளும் அடுத்தடுத்து ஏற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தீபாவளிப் பண்டிகைக்காக பொதுமக்கள் பெருமளவில் ன்றுகூடும் பொழுது இந்த நோய் எமது பிரதேசத்திலும் தீவிரமாகப் பரவும் வாய்ப்புள்ளது.

எனவே இந்தத் தீபாவளிப் பண்டிகையை பொதுமக்கள் அனைவரையும் வீட்டிலிருந்து அமைதியாகக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



இதன் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். எனவே நாம் அனைவரும் சமூகப் பொறுப்புடன் அமைதியாக வீட்டிலிருந்து எமது இந்தத் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 12 வயது மாணவிக்கு நுவரெலியாவில் தொற்று

நுவரெலியா – மஸ்கெலியா காட்மோர் தோட்டத்தில், பிரொக்மோர் பிரிவில் மேலும் ஒரு கொரோனா வைரஸ் தொற்றாளர் நேற்று (செவ்வாய்க்கிழமை) அடையாளம் காணப்பட்டுள்ளார் என சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் வசிக்கும், 12 வயதுடைய மாணவியொருவருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்த நிலையில், நேற்று காலை பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகின. இதில் அந்த மாணவிக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதிபடுத்தப்பட்டது.

மேலும், சிறுமியின் தந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்றிருக்கின்றமை கடந்த 5 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டமையையடுத்து, அவர் அம்பாந்தோட்டையிலுள்ள கொரோனாச் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

கொழும்பில் மேசன் வேலையில் ஈடுபட்டிருந்த அவர், அண்மையில் வீட்டுக்கு வந்திருந்த வேளை வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் இதுவரையில் 16 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் 310 பேர் சுயதனிமைப்படுத்தலில்!

கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பாக மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடக சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

அந்த ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:–

தற்போது 310 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளனர் எனவும், ஜெயபுரம் பகுதியில் கொழும்பில் தொழில் புரிந்து வீடு திரும்பிய நிலையில் சுய தனிமைப்படுத்தலுக்குட்பட்ட நபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக்குள்ளானவருடன் தொடர்புபட்ட குடும்பங்களும் சுய தனிமைப்படுத்தலுக்குஉட்படுத்தப்பட்டுள்ளனஎனவும்அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனை நிறைவடைந்து தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டாலும் தொடர்ந்து 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான உலருணவு பொதிகளை நான்கு பிரதேச செயலகமும் வழங்கி வருகின்றது. இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் 197 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று மாதாந்த சிகிச்சைக்காக வைத்தியசாலை வரும் நோயாளர்களுக்கு குறிப்பாக முதியவர்களுக்குத் தற்போது தபால் மூலம் வீடுகளுக்கு மருந்துகள் அனுப்பி வைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

மாவட்டத்தில் கொரோனா நிலைமை சுகாதாரத் தரப்பினரின் அறிக்கையின் படி ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்தாலும் மக்கள் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் எனவும் மாவட்ட அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

# மாகாணத்துக்கிடையில் சேவையிலீடுபடும் தனியார் பஸ்களுக்கு கட்டண தள்ளுபடி!

## அமைச்சரவை அங்கீகாரம்

மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சேவை உரிமையாளர்களுக்குப் பல்வேறு கட்டணத் தள்ளுபடியை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொரோனா தொற்று பரவல் காரணமாக மாகாணங்களுக்கு இடையேயான பஸ் சேவைகளை பஸ் உரிமையாளர்கள் புறக்கணித்துள்ள நிலையில் பின்வரும் நிவாரணங்களை வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அதன்படி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கான கட்டணங்கள், தாமதக் கட்டணங்கள், ஒப்பந்தக் கட்டணங்கள், பதிவுப் புத்தகத்துக்கான கட்டணங்கள், அனுமதிப்பத்திரத்துக்கான ஒப்புதல் கட்டணங்கள், அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு தற்காலிக அனுமதி வழங்கல் கட்டணங்கள் ஆகியவையை நீக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

# வெலிமடை நீதிமன்ற கட்டடம் தற்காலிகமாக மூடப்பட்டது!

கொரோனா தொற்றாளர்கள் நீதிமன்றத்துக்கு வரக்கூடுமென்ற அச்சத்தால், வெலிமடை நீதிமன்றத் தொகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வெலிமடை மஜிஸ்திரேட் நீதிமன்றம், வெலிமடை மாவட்ட நீதிமன்றம் ஆகியனவே மூடப்பட்டுள்ளவையாகும்.

வெலிமடை நீதிபதி நதீரா போகாதெனிய விடுத்த உத்தரவிற்கமையவே, இந்த நீதிமன்றங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என சட்டத்தரணிகள் சங்க சார்பில் சேனக்க பண்டார தெரிவித்தார்.

நீதிமன்றங்கள் மூடப்பட்டுள்ள காலப் பகுதியின் வழக்குகள், அனைத்தும் நீதிமன்றங்கள் திறந்த பின்னர் மாற்றுத் திகதிகள் அறிவிக்கப்படுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நவீன தொழில்நுட்பங்கள் ஊடாக பொலிஸ் நடவடிக்கை முன்னெடுப்பு!

நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி மிகவும் வினைத்திறனான பொலிஸ் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு நீர்ப்பாசன அமைச்சரும் உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு நேற்று செவ்வாய்க் கிழமை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எமது நாட்டின் பொலிஸ் உத்தியோகத்தர்களின் அறிவு, திறன், மனபாங்கு மற்றும் நவீன பொலிஸ் கடமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியான பிரயோகங்கள் மற்றும் பொறிமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மிகவும் வினைத்திறனான பொலிஸ் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் மூலம் பயங்கரவாத செயற்பாடுகள், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல், போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புபட்ட குற்றச் செயல்கள், ஆள் கடத்தல் வியாபாரம், நிதி மோசடி, சைபர் குற்றங்கள் போன்ற 17 துறைகளின் கீழ் பொலிஸ் ஒத்துழைப்பை நிறுவுவதற்காக வெளிநாட்டமைச்சின் வழிகாட்டலின் கீழ் வெளிநாட்டு பொலிஸ் நிறுவனங்களுடன் பொலிஸ் விடயதான அமைச்சின் மூலம் புரிந்தனர்வு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

அங்கம் 09

# இலங்கை – இந்திய ஒப்பந்தம்;

# ஒரு வரலாற்றின் திசை நோக்கு

சிரேஷ்ட சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் - T.R.R.O)
ஆஸ்திரேலியா

மஹிந்தவை மாற்ற, சர்வதேசத்துக்கு கூட்டமைப்பினர் துணை போனார்கள். மஹிந்தவிற்காக மைத்திரி வந்தார். கூட்டமைப்பினர் ரணிலை பிரதமராக (இவர் ஒப்பந்தத்தின் பரம எதிரி என்பதும் இந்தியாவிற்காக இவர் போடுவது கூழைக்கும்பிடு என்பது தெரிந்தும்) பாதுகாத்தனர்.



புதிய அரசியலமைப்பு வருகிறது. ஏக்கியராஜ்யத்துக்குள் சுய ஆட்சி என்றார்கள். ஜனநாயகத்தை காப்பாற்ற 19ஆம்ஷரத்துசுபீட்சத்தைதரும்என்றும்பறைசாற்றினர்.

இன்று 19 ஆவது ஷரத்துப்போய் 20 ஆவது ஷரத்து வந்து ஜனநாயகம் பெட்டிக்குள் போடப்பட்டு, மஹிந்தவின் தம்பி குடும்ப ஆட்சியில் 19 இற்கும் மேலான அதிகாரத்தோடு பதவியிலிருக்கிறார்.

கடந்த ஆண்டுகளில், முக்கியமாக சென்ற ஐந்து ஆண்டுகளில் தமிழர்கள் பெற்றது என்ன..? உள்நாட்டு அரசியல் ஒன்றை ஒன்று சார்ந்து எங்கு மக்கள் போகிறார்கள்!?

என்ன நன்மையடைந்தனர்..?

தங்கள் பலத்திலே நிற்பதற்கு அவர்களுக்கு வழிவகை உண்டா..?

அவர்களின் பலம்தான் என்ன என்பது பற்றி உற்றுநோக்கப்படவேண்டும். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படை தமிழர் பிரதேசமும் அதிகார பரவலும்தான். ஆனால், அதனை ஜே.ஆரே விரும்பவில்லை. எத்தனையோ முட்டுக்கட்டைகள் வைத்தும் , ஆனால் ஒப்பந்தமளவில் விட்டுக்கொடுத்தும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கும் வழிவகுத்தார்.

அதே தோரணையை கோட்டாபாய ராஜபக்ஷ இன்று பிரேமதாஸ வழியில் வைக்கிறார். அதிகாரப்பரவல் என்பதோ, தமிழர் பிரதேசம் என்பதோ ஒப்பந்தத்தின் பிழையான வியாக்கியானம். மத்தியின் அதிகாரத்தை பிரதேசவாரியாக அமுல்படுத்தல் ( Not devolution, It is only this dissemination) என்ற புது விளக்கமும், ஒரு நாடு 'ஒரு சட்டம்' ஒரு மக்கள் என்ற சித்தாந்தமும் பெருகுகிறது. பிரேமதாஸவின் 3C என்பதை விட்டுவிட்டு, தமது நிலைப்பாட்டை எதிர்ப்பவர்கள் முறையாக படையினரால்



கவனிக்கப்படுவார்கள் என்கிறார்.

இவற்றைத் தமிழ் மக்கள் உணர்ந்து முறையான தலைமையினாலும் நன்மையான சாணக்கியத்தினாலும் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தவேண்டும். ஆனால், அவ்வாறு பயன்படுத்துவார்களா..? என்பதுதான் எங்களது வரலாற்றுப்பாதையில் கேள்விக்குறியாகிறது.

இவர்கள் தங்களுக்குள் யாரை இந்தியா அழைத்துப் பேசவேண்டும் என்று பழைய பல்லவியை, அல்லது அவரை அழைத்தால் எங்களையும் அழைக்கவேண்டும் என்று பிரதிநிதித்துவத்திற்காக இந்தியாவுக்கு செய்தி அனுப்புகிறார்கள்.

புலிகள், மற்ற அமைப்புகள், தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதிகளின் அனுபவங்களால் இந்திய வெளிநாட்டு அலுவலகம், முக்கியமான தென்பகுதி (South Block) அமைப்பு எல்லோரும் கூட்டாக தங்களிடம் இன்றைய நிலையில் ஒப்பந்தத்தை தமிழர் சார்பாக ஒப்பேற்றித்தர வேண்டும் எனக் கேட்கிறார்கள்.

அவ்வாறின்றி, அதனை நடைமுறைப்படுத்த கையிலெடுத்தால் இன்னொரு பகுதி அரசாங்க சார்பாக நின்றுகொண்டு நிலையை சிதைக்கக் கூடாது எனச்சொல்வது எமக்கு வழக்கமான சரித்திரம். தற்போதைக்கு கத்தி



யின்றி, இரத்தமின்றி டக்ளஸ், அங்கஜன், கருணா, பிள்ளையான், சுரேன் ராகவன், வியாழேந்திரன் என ஒரு சிலர் இணங்கிப்போகும் நடைமுறைக்கு வாக்குகளால் வந்திருக்கிறார்கள். ஆகவே இந்தியாவுக்கு நம்பகமான ஒரு தலைமையை தமிழரிடையே உருவாக்குவது எங்களில்தான் தங்கியுள்ளது.

தமிழர்களுடையது என்று இருக்கும் எங்களது தற்போதைய வளங்கள்தான் என்ன..? ஒப்புக்காக தற்போது இருக்கும் நாடாளுமன்ற பிரதிநிதிகள் ஒவ்வொரு கட்சி சார்ந்து இயங்குகிறார்கள். அவர்களிடையே நோக்கத்திலும் சிந்தனையிலும் வித்தியாசம். அவற்றுக்கும் மேலாக அவர்களுக்குள் இருக்கின்ற உட்பிரச்சினைகள் வெளிப்பட்டுகேவலமாக சந்தி சிரிக்கின்றன.

இவர்களை ரோம் எரியும்போது நீரோ மன்னன் வயலின் வாசித்ததற்கு ஒப்பீடாக வேண்டுமானால் சொல்லலாம். இவர்களை ஒருமுகப்படுத்த ஏதுவான பலம் வாய்ந்த சிவில் அமைப்போ, கூட்டு அமைப்புகளோ அந்தத்திசையில் பயணிப்பதாகத் தெரியவில்லை. இருப்பவை எல்லாம் ஏதோ ஒரு வழியில் கட்சிகளில் ஈடுபாடுகொண்டவையாக இயங்குகின்றன.

ஆக, அப்படியான பயணத்தில் தமிழ்மக்களை முன்வைத்து (கட்சிகளை அன்றி) முடிவுகள் எடுக்க உந்துகின்ற ஆளுமையுள்ள சிவில் அமைப்புகள் முன்வர வேண்டும். அது அத்தியாவசியம். அடுத்தது புலம்பெயர் தேசத்தில் அயராது உழைக்கும் அமைப்புகள். இவைகளும் பரந்து விரிந்து ஒன்றுக்கொன்றாய் இயங்குகின்றன. ஓர் உடன்பட்ட நோக்கோடு ஒரு விடியலுக்காக இவர்களை செயற்பட வைப்பது மற்றும் ஒரு சவாலான



தலையாய கடமையாகும்.

மூன்றாவது மகாநாடு ஒன்றை இந்திய அனுசரணையுடன் டிசம்பர் 2020 இல் நடத்தும் நோக்கில் எடுக்கப்பட்ட முயற்சிகள் கொரோனோவின் தாக்கங்களினால் பிற்போடப்பட்டன. ஆயினும், இந்த முயற்சிக்கான ஈடுபாட்டில் புலம்பெயர் சமூகம் எவ்வளவு பிரிவுகளுடன் தன்னிச்சையாக இயங்குகின்றது என்பதும் தமிழரை முன்னிலைப்படுத்தி முன்னேறவேண்டியதற்கு சமரசம் காண்பது எவ்வளவு கடினம் என்பதும் தெளிவானது.

அதனைச் செய்யாத பட்சத்தில் நாம் அந்த அரிய வளத்தை ஈடுபடுத்துவதில் தவறுவோம்.

மோடியின் செய்திகளை கேள்வியுற்றதும் இந்தியாவை வசைபாடிய சில தமிழ் அமைப்புகள், தாங்கள் உணர்ந்துவிட்டதாகவும், இந்தியா தமிழ் மக்களுக்காக ஆதரவு தரவேண்டும் என்று அந்தந்த நாட்டு தூதுவருக்கு மனுக்களும் அனுப்பித் தூது செல்கிறார்கள். அதிலும் அவரைப் பற்றியும் இவரைப் பற்றியும் தூதரகத்திற்கு வைவதிலேயே இருக்கிறார்கள்.

இந்தியாவின் கணக்கெடுப்பில் இவற்றை அல்லது இவர்களை அது அறியாதது அல்ல. ஆனால், அனுபவம் காரணமாக இந்தியா ஒரு தலைமையை தமிழர் மீது சுமத்த விரும்பாது. எனினும், தங்களது நிலை கருதி தங்களுக்கு நம்பகமானவர்களையே விரும்பும். ஆக, அதனை உருவாக்குவது எமது தலையாய கடமையேயன்றி அது இந்தியாவின் பொறுப்பல்ல.

கஷ்டமும் வியாதியும் எங்களுக்குத்தான். இதனை உள்நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் இயங்கும் தமிழ் சிவில் சேவை அமைப்புகள் தூரநோக்கில் விட்டுக்கொடுத்து பணியாற்றிக்கொண்டு வரவேண்டும்.

அடுத்த ஒரு வளம் இந்தியாவில் 1977 ஆம் ஆண்டிலிருந்து அகதிகளாக தஞ்சம் புகுந்த தமிழ்மக்கள், பின்னர் 1990 இல் இந்தியப்படைகளின் வெளியேற்றத்தால் புலிகளால் பாதிக்கப்படலாம் என்று இந்தியாவில் தஞ்சம் புகுந்தோர். அதன்பின்னர் 2009 முதல் அடைக்கலம் தேடியோர்.

அத்தோடு இந்திய படைகளோடு அவர்களுக்கு ஆதரவாக போராடிய பல இயக்க உறுப்பினர்களை வரதராஜப்பெருமாள், பத்மநாபா, பரந்தன் ராஜன் முதலான பல இயக்க உறுப்பினர்களை இந்தியா பாதுகாப்புக்காக குடியமர்த்தி வைத்திருந்தது. பின்னர், கப்பல்களில் சென்ற அவர்களது ஆதரவாளர்களை தமிழ்நாட்டில் இறங்க அனுமதிக்கமாட்டேன் என்று கருணாநிதி உத்தரவிட்டார். மத்திய அரசு ஒரிஸ்ஸாவில் அன்றைய முதலமைச்சர் பட்நாயக்கின் உதவியுடன்



அவர்களை விசாகபட்டணத்தில் தரையிறக்கி அவர்களுக்கு வாழ்வாதாரங்கள் வழங்கப்பட்டன.

இவர்களில் 1987 இல் இருந்தோரை ஒப்பந்தப்படி அவர்களின் பழைய இடங்களுக்கு மீளக்குடியேற்றி, பாதுகாப்பாக வாழ்வதற்கு இந்தியா பொறுப்பு நின்றது. அவர்களில் கணிசமான பேர் இன்னும் திரும்பவில்லை. அவர்களின் குழந்தைகள் வளர்ந்து வெளியேறி வெளிநாடுகளில் அகதிகளாக அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

இது, 1987 இன் பின்னர் வந்த அகதிகளுக்கும் பொருந்தும். இந்தியா பாதுகாப்புக்காக அழைத்துச் சென்றவர்களுக்கும் பொருந்தும். ஆகவே இந்தியாவிற்கு அவர்களை பாதுகாப்பாக திருப்பி அனுப்பும் தார்மீகக் கடமையும் உண்டு.

நாடு திரும்ப வழியின்றி, தங்களுக்காக மட்டுமல்ல, தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக இந்திய அரசின் கதவுகளை கடந்த 33 வருடங்களாக அவர்கள் தட்டிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்குள் உதித்த தலைமைகளோடு இந்திய அரசின் கொள்கை வகுப்பாளர்கள் தொடர்ந்தும் தொடர்பாடல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பரஸ்பரம் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். நாட்டிலிருக்கும் எங்களது தலைவர்கள் தமிழ்நாடு சென்றாலும் அந்த அகதிகளை ஆறுதலுக்காவது சந்திப்பதில்லை. அவர்கள் திரும்பி வரவேண்டுமா என்பதிலும் அக்கறை காண்பிப்பதில்லை. அவர்களுக்கு வாக்குகள் இல்லாதமையும் அதற்கு காரணமாக இருக்கலாம். ஆகவே, இந்த வளமே எங்களிடமிருக்கும் மிக முக்கியமான சக்தி என்பதையும் கருதி செயல்படவேண்டும்.

சுயநிர்ணய உரிமை கோருவதற்கானதும் பெறுவதற்குமான பரிமாணங்கள் யாவுமே தமிழருக்கு என்றுமே இருந்திருக்கிறது. இன்றைக்கும் யுனெஸ்கோ நிபுணர்கள் குழுவின் அடிப்படையில் உள்நாட்டுக்குள்ளேயே சுயநிர்ணய உரிமை கோருவதற்கான தகைமையை தமிழர்கள் கொண்டுள்ளவர்கள்தான். இவற்றை நாம் பேசிக்கொண்டிருப்பதைத் தவிர, செயன்முறைக்கு இறங்கியதற்கான செயல்திட்டங்கள் இதுவரையில் பொது நன்மைக்கான சாணக்கியத்தால் உருவாகவில்லை.

(11 ஆம் பக்கம் பார்க்க...)



# மேல் மாகாணத்துக்கான தேவையற்ற பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்

## யாழ். மாவட்ட மக்களிடம் அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் மேல் மாகாணத்துக்கான தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் க.மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட தற்போதைய நிலைமை தொடர்பில் திங்கள் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளது. அல்வாய் பகுதியில் மூன்று பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 1,419 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப் பட்டுள்ளார்கள். மேலும் மூன்று கிராமங்கள் முடக்கல் நிலையில் காணப்படுகின்றதுன. அங்கு தற்போது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

முடிவுகளைப் பொறுத்து மிக விரைவில் அந்த மூன்று இடங்களும் விடுவிக்கப்படவுள்ளன. அதாவது கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இராஜகிராமம், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாஷையூர் மற்றும் திருநகர் பகுதி தற்போது முடக்கல் நிலையில் காணப்படுகின்றன.

இதனைவிட அரசின் அறிவிப்பின்படி தூர இடங்களுக்கான போக்குவரத்து தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது. ஏற்கனவே மட்டுப்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் போக்குவரத்தில் மிக அத்தியாவசியமான தேவையுடையோர் மாத்திரம் பயணம் செய்யுமாறு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். ஏனென்றால் கொழும்பு அல்லது மேல் மாகாணம் போன்ற இடங்கள் அபாய வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவசியமான தேவையுடையவர்கள் மட்டும் இந்தப் போக்குவரத்தைப் பயன்படுத்தவும்.

அதேநேரத்தில் வடக்கு மாகாணத்துக்குள்ளான போக்குவரத்தில் எந்தவிதமான தடையும் இல்லை. எனினும், மிகவும் விழிப்பாக தமது பயணங்களை மேற்கொள்ளுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பஸ்களில் ஆசனங்களுக்கு அமைவாக பயணிகள் ஏற்றப்பட வேண்டும். அத்தோடு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பயணிகள் ஏற்றப்பட வேண்டும். அலுவலங்கள் மற்றும் நிறுவனங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தமது வழமையான செயற்பாட்டைப் பின்பற்றுவதற்குத் தடையில்லை. குறிப்பாக உத்தியோகத்தர்கள் தங்களுடைய சொந்தப் போக்குவரத்தைப் பின்பற்றினால் சிறந்தது. அப்படி இல்லாவிட்டால் அவர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றிப் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தலாம்.

உயர்தரப் பரீட்சை முடிவடைந்து விட்டது. பாடசாலைகள் மீளத் திறப்பது பற்றி அரசு அறிவித்துள்ளது. அதேநேரத்தில் பொது நிகழ்வுகள், ஆலய வழிபாடுகள் ஏற்கனவே அரசால் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டதாகச் செயற்படுத்தப்படல் வேண்டும்.

பொதுமக்களை அத்தியாவசிய செயற்பாடுகளுக்கு மாத்திரம் வீட்டிலிருந்து வெளியில் வருமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஏனைய அநாவசியமான பயணங்களைத் தவிர்த்தல் நல்லது.

அதேநேரத்தில் தங்களுடைய விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ அல்லது தங்களுடைய வாழ்வாதார செயற்பாடுகளை மேற்கொள்ளவோ எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை.

தற்போது மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதன் காரணமாக வர்த்தகர்கள் தங்களுக்குரிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் அதேபோல அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்வதற்கும் கட்டுப்பாடு இல்லை. அவ்வாறு செல்பவர்கள் மிகவும் சுகாதார நடைமுறையைப் பின்பற்றி செயற்பட வேண்டும். அவர்களுக்குரிய சுகாதார நடைமுறைகள் பற்றி சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் அதனைச் செயற்படுத்துவார்கள் . - என்றார்.

## வெளிநாடுகளில் சிக்கிய 34 பேர் நாடு திரும்பினர்

**கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளி நாடுகளில் சிக்கியிருந்த 34 இலங்கையர்கள், நாட்டை வந்தடைந்துள்ளனர்.**

**நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை, கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்துள்ளனர்.**

**ஐக்கிய அரபு எமிரேட்ஸ்லிருந்து 12 பேர், கட்டாரிலிருந்து 22 பேர் இவ்வாறு நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.**

**இவ்வாறு வருகை தந்துள்ள அனைவருக்கும், பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இதேவேளை, இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்தைக் கடந்து 14 ஆயிரத்து 285ஆக அதிகரித்துள்ளது.**

**மேலும், கொரோனா தொற்றிலிருந்து குண மடைந்தோரின் மொத்த எண்ணிக்கை எட்டா யிரத்து 880 ஆக அதிகரித்துள்ளது.**

**இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 370 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து இதுவரை 36 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## மண்டைதீவில் கடற்படையினருக்கு காணி சுவீகரிக்கும் முயற்சி தோல்வி

### கடும் எதிர்ப்புடன் தடுத்து நிறுத்தம்



யாழ்ப்பாணம், நவ.11

யாழ்ப்பாணம், வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவுப் பகுதியில் பொதுமக்களின் காணிகளைக் கடற்படையினருக்குச் சுவீகரிக்கும் முயற்சி அரசியல்வாதிகளினதும் பொதுமக்களினதும் கடும் எதிர்ப்புக்களையடுத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மண்டைதீவுப் பகுதியில் அதாவது மண்டைதீவுச் சந்தியில் கடற்படை முகாம் அமைந்துள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணியை கடற்படையினருக்குச் சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தால் அளவீடு செய்யப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து காணி உரிமையாளர், அப்பகுதி மக்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணி ஆகிய கட்சிகளின் அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் நேற்று ஒன்றுதிரண்டு காணி அளவீடு செய்யும் இடத்துக்கு முன்பாக எதிர்ப்பு வெளிப்படுத்தி கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில் காணி அளவீடு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

## 6 லட்சத்தைத் தாண்டின பி.சி.ஆர்.பரிசோதனைகள்

இலங்கையில் இதுவரை 6 லட்சத்துக்கும் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) மாத்திரம் தொற்றுநோயியல் பணியகத்தால் 8 ஆயிரத்து 272 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பிரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 6 லட்சத்து 6 ஆயிரத்து 693 ஆக உள்ளது.

## 7 புதிய தூதர்கள் நியமனம் நாடாளுமன்ற குழு அனுமதி

வெளிநாட்டுத் தூதுவர்களாகச் சேவையாற்ற இலங்கை அரசாங்கத்தால் பெயரிடப்பட்ட ஏழு புதிய தூதுவர்களுக்கு நாடாளுமன்ற உயர் பதவிகள் தொடர்பான குழு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற குழு அறையில் உயர் பதவிகள் பற்றிய குழு கூடியபோதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அஹமட்.ஏ. ஜவாட் சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும், அருனி ரணராஜா நெதர்லாந்துக்கான தூதுவராகவும், தர்சன பெரேரா சுவீடனுக்கான தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், எம்.கே.பத்மநாதன் எகிப்துக்கான தூதுவராகவும், டி.கே. சேமசிங்ஹ போலாந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், சமிந்த கொலன்னே தாய்லாந்துக்கான தூது வராகவும் நியமிக்கப்படவுள்ளனர். அத்துடன், எயார் மார்சல் சுமங்கல டயஸ் கனடாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## றிஜ்வே வைத்தியசாலையில் மேலும் மூவருக்குத் தொற்று!

*கொழும்பு - லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மேலும் மூவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.*

*அதன்படி வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரும் தாதியரும் ஊழியர் ஒருவருமே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.*

*ஏற்கனவே இந்த சிறுவர் வைத்தியசாலையில் 10 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.*

*இந்த நிலையில் மேலும் மூவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் மேலும் நால்வர் சாவு கொரோனா மரணம் 40 ஆக உயர்வு

கொழும்பு, நவ.10

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரி ழந்தோர் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள் ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொரோனா தொற்று உறுதியான நிலையில் மேலும் நான்கு பேர் சாவடைந்துள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்குறித்த மரணங்கள் குறித்த விவரங்களை அர சாங்க தகவல் திணைக்களம் இன்று மாலை வெளியிட் டுள்ளது.

அதன்படி 51 வயதுடைய இராஜகிரிய பிர தேசத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவர் முதி யோர் இல்லத்தில் தங்கியிருந்தவராவார். கடந்த 7ஆம் திகதி அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந் தார். கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நியுமோனியா காய்ச்சல் காரணமாக அவர் உயிரிழந் துள்ளார்.

கொழும்பு - 10 ஐச் சேர்ந்த ஆண் ஒரு வரும் உயிரி ழந்துள்ளார். அவர் கடந்த 23ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்துள்ளார். கொரோனா தொற்றினால் சுவாச கட்டமைப்பில் ஏற்பட்ட பாதிப்பால் அவர் உயிரி ழந்துள்ளார்.

கம்பஹா, உடுகம்பல பிரதேசத்தில் 63 வயதுடைய பெண் ஒருவர் உயிரி ழந்துள்ளார். அவர் கம்பஹா மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அவரும் கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நியுமோனியா காய்ச் சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, 55-60 வயதுக்குட்பட்ட அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளார். அவ ரது உடல் கடந்த 8ஆம் திகதி பிரேத பரிசோத னைக்காக கொண்டு வரப்பட்ட நிலையில் அவருக்குக் கொரோனா தொற்றியமை உறுதியாகியுள்ளது. அவரது மரணத் துக்குக் கொரோனா தொற்றியமையே காரணமா கும்.

அதற்கமைய இலங்கையில் இது வரையில் 40 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

## மூளைக்காய்ச்சலால் யாழில் யுவதி மரணம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை - கீரிமலை பகுதி யைச் சேர்ந்த யுவதி ஒருவர் மூளைக்காய்ச்சல் காரண மாக உயிரிழந்துள்ளார் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன. பாலசுப்பிர மணியம் நிபோயனா வயது 20 என்ற யுவதியே உயி ரிழந்தவராவார்.

கடந்த 29ஆம் திகதி குறித்த யுவதி வாந்தி எடுத்து மயங்கியுள்ளார். அவரை உறவினர்கள் அழைத்துச் சென்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லையில் சேர்த்திருந்தனர். எனினும், யுவதி நேற்று சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

மரண விசாரணையை வைத்திய சாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைக் குச் சடலம் உத்தரவிடப்பட்டுள்ளது.

### நவம்பர் 7ஆம் திகதிக்குப் பின்னர்

## வேறு மாகாணங்களிலிருந்து வடக்கு வந்தோர் பதிவு செய்யக் கோரிக்கை

நாட்டில்தற்போது பல்வேறு மாவட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வரு கின்றது. எனவே, 07.11.2020 ஆம் திகதியிலிருந்து ஏனைய மாகாணங் களில் இருந்து வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்தவர்கள் அனைவரும் தத்தமது பிரதேசத் தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரியிடம் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் இன்று அவர் மேலும் தெரிவித்த தாவது:-

இந்தத் திகதியின் பின்னர் வருகை தந்தோரை வீட் டில் சுயதனிமைப்படுத்து தலுக்குட்படுத்துவது தொடர் பான முடிவுகளை அவர்கள் புறப்பட்டு வந்த - இருந்து வந்த - பிரதேசங்களின் நோய் நிலைமைகளின் அபா யங்களைப் பொறுத்து சுகாதார வைத்திய அதிகாரிகள் தீர்மானிப்பர்.

இவ்வாறு வேறு மாகாணங்களில் இருந்து தமது பிரதேசங்களுக்கு வருகை தந்தோர் பற்றிய தகவல் களை அவர்களோ அல்லது பொதுமக்களோ தமது பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோ தகர், குடும்பநல உத்தியோகத்தர் அல்லது வடக்கு மாகாண சுகாதார சேவை திணைக்களத் தின் 24 மணி நேர அவசர அழைப்பிலுள்ள 0212226666 என்ற இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு உங்களது விவரங் களை அறியத்தர வேண்டும். இதன் மூலம் தங்களை யும் சமூகத்தையும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டிய அவசர சேவைகளை எம்மால் வழங்க முடியும். இந்த நோய் எமது மாகாணத்தில் பர வாதிருக்க எமக்கு தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்கவும் - என்றார்.

## பருத்தித்துறை நகர சபையின் 'பட்ஜட்' ஒரு மேலதிக வாக்கால் நிறைவேற்றம்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும் எதிர்ப்பு

கொழும்பு, நவ.10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்ட பருத்தித்துறை நகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் ஒரு மேலதிக வாக்கால் இன்று நிறைவேற்றப்பட் டது.

15 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் 6 உறுப்பினர்கள் பட்ஜட்டுக்கு எதிராக வாக்க ளித் தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் 5 உறுப்பினர்களுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும் சுயேச்சையான சமத்துவக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்த னர்.

எஞ்சிய ஈழமக்கள் ஜனநாயகக் கட் சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களும் சபைக்குச் சமுக மளிக்கவில்லை.

இந்நிலையில், பட்ஜட்டுக்கு ஆதர வாக7 வாக்குகளும், எதிராக 6 வாக்கு களும் கிடைத்த நிலையில் ஒரு மேலதிக வாக்கால் அது நிறை வேற்றப்பட்டது.

இன்று காலை 9 மணியளவில் பருத் தித் துறை நகர சபைத் தலைவர் யோ. இருதயராஜா தலைமையில் சபையின் விசேட கூட்டம் ஆரம் பமானது. இதன் போது தலைவர் வரவு - செல வுத் திட்டத்தைச் சமர்ப்பித்து பேசினார். முடிவில் அதற்கான அங்கீகாரத்துக்கு விட்டார்.

பட்ஜட் அங்கீகாரத்துக்கு வாக்கெடுப்பு இரக சியமாகவா? பகிரங்கமாகவா? நடத்த வேண்டும் என சபையோரை தலைவர் வினாவினார்.

பகிரங்கமாக வாக்கெடுப்பு நடைபெற வேண் டும் என சபையோர் கேட்டுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்களிப்பதற்கு முன்னர் எதிராக வாக்க ளித்த தமிழ்த் தேசிய மக்கள் மக் கள் முன்னணி உறுப்பினர்கள் அதிருப்திக் கருத்துக்களை வெளியிட்டனர். வாக்கெடுப்பு முடிந்த பின்னர் அவர்களுக்குப் பதிலளித்த சபைத் தலைவர், உங்களின் அதிருப்திகளில் சிலவற்றை ஏற்றுக் கொள்கின்றேன். சிலவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்க ளுக்கு அடுத்த கூட்டத்தில் பதில் அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

## கோப்பாயில் சிகிச்சை நிறைவு செய்த 18 பேர் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்!





(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

கோப்பாய் கொரோனா விசேட சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகளை நிறைவு செய்த 18 பேர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தெற்கைச் சேர்ந்தவர்களே இன்று வீடுக ளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொரோனாத் தடுப்பு ஆலோசனை மற்றும் நோய் நிர்ணய அட்டைகள் வழங்கப்பட்டதுடன் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி தலை வரின் சம்மதத்துடன் ஒவ்வொருவருக்கும் கல் லூரியில் இருந்த வேப்ப மரகன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

## யாழ். மருத்துவ பீடத்தில் புதன் முதல் மீண்டும் பி.சி.ஆர். சோதனை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் நாளை புதன்கிழமை முதல் மீண்டும் பி. சி. ஆர். பரிசோத னைகள் ஆரம்பிக்கப்படவுள் ளன.

மருத்துவ பீடத்தின் வழக்க மான பணிகளுக்குப் பாதிப் பேதும் ஏற்படாத வகையில் பி. சி. ஆர். பரிசோதனை ஆய்வு கூடம் மருத்துவ பீடத்தில் இருந்து வேறாக்கப்பட்டு, தனி யான பாதை அமைக்கப்பட்டுள் ளதுடன், சர்வதேச நுண்ணு யிரியல் ஆய்வுத் தர நியமங்க ளுக்கமைய பி. சி. ஆர். பரி சோதனைகள் நாளை முதல் இடம்பெறவுள்ளன.

மருத்துவ பீடத்தில் இருந்து கடந்த முறை இந்தப் பரிசோத னைகளை மேற்கொண்ட மருத் துவர்களான அ. முருகா னந்தன், மு. கலாமதி மற்றும் பேராசிரியர் செ. கண்ணதா சன் ஆகியோர் மட்டுமே இந்தப் பரிசோதனைகளில் ஈடுபட வுள்ளனர். இவர்களுடன் பணியாற்றுவதற்கென யாழ். பல்கலைக்கழகத்தினால் நான்கு நுண்ணுயிரியல் ஆய்வு கூடவியலாளர்களும் புதிதாகப் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கில் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், யாழ். போதனா வைத்திய சாலையில் மாத்திரம் பி. சி. ஆர். பரிசோதனைகள் மேற் கொள்ளப்படுவதனால் முடி வுகளை வெளியிடுவதில் தாம தம் ஏற்பட்டிருந்தது. இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி. சி. ஆர். பரிசோ தனைகளை மேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியி டுவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ் . பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட் டத்தில் யாழ். பல்கலைக்கழ கத் துணை வேந்தர் பேராசிரி யர் சி. சிறிசற்குணராஜா, வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். கேதீஸ்வரன், உதவிப் பணிப்பா ளர் மருத்துவர் எஸ். குமார வேல், யாழ். போதனா வைத்தி யசாலைப் பணிப்பாளர் மருத்து வர் த. சத்தியமூர்த்தி, யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடா திபதி மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ், சமுதாய மருத்துத் துறைத் தலைவரும், பல் கலைக் கழக கொவிட் 19 செய லணியன் இணைப்பாளரு மான மருத்துவர் எஸ். சுரேந்திர குமாரன் மற்றும் நுண்ணுயி ரியல், நோயியல் துறை விரிவு ரையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி. சி. ஆர். பரி சோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதி ரிகளே சோதனை செய்யப்பட முடியும். மருத்துவ பீடத்தினால் மேற்கொள்ளப்படும் பி. சி. ஆர். பரிசோதனை முடிவுகள் தின மும் மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதி வாளர் எஸ். ரமேஸ் தெரிவித் துள்ளார்.

# விமானப்படைத் தளபதியை சந்தித்தார் பிரதமர் மஹிந்த!



புதிய விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரனவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) இடம்பெற்றுள்ளது.

18 ஆவது விமானப்படை தளபதியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து எயார் மார்ல் சுதர்ஷன பதிரன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து, தனது சேவை தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போது, புதிய விமானப்படை தளபதிக்கு வாழ்த்துக்களை தெரிவித்த பிரதமர், நாட்டின் பாதுகாப்பு மற்றும் விமானப்படையின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இந்த உலகத்திற்கு ஏற்றவகையில் இலங்கை விமானப் படையை முன்னேற்ற பாதையில் நகர்த்துதல் மற்றும் தேசிய பொறுப்புகளை நிறைவேற்றுதல் பற்றி புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ல் சுதர்ஷன பதிரன நம்பிக்கை வெளியிட்டார்.

முழு உலகுக்கும் அச்சுறுத்தலாகியுள்ள கொவிட் - 19 தொற்று நிலையிலிருந்து இலங்கை மக்களை விடுவிப்பதற்காக இலங்கை விமானப்படை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதமர் இதன்போது பாராட்டினார்.

18 ஆவது விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள எயார் மார்ல் சுதர்ன பதிரன, முப்பது ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான மனிதாபிமான நடவடிக்கைக்கு போர் படைகளை இயக்குவதில் முக்கிய பங்களிப்பு செய்தார்.

1990 ஆம் ஆண்டு சுப்பர் சொனிக் எவ் - 7 மற்றும் 1995 ஆம் ஆண்டு கிபீர் ஜெட் விமானத்தை இலங்கைக்கு கொண்டு வந்த விமானியும், கிபீர் விமான படைப்பிரிவின் கட்டளை அதிகாரியுமான சுதர்ஷன பதிரன, பிரிவினைவாத பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்புக்காக வீர விக்ரம விபூஷண பதக்கத்தையும் மற்றும் ரண விக்ரம பதக்கத்தையும் தலா இரண்டு முறைகளும், ரணர பதக்கத்தை நான்கு முறையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். எயார் மார்ல் சுதர்ஷன பதிரன, கண்டி தர்மராஜ கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவர் ஆவார்.

# 460 பொலிஸ் அதிகாரிகளுக்கு இதுவரை கொரோனாத் தொற்று!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, நவ.11

நாட்டில் இதுவரை 460 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா தொற்றுக்குள்ளான 6 பொலிஸ் அதிகாரிகள் குணமடைந்துள்ளமையுடன் 250 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 355 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப் படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேல்மாகாணத்தில் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மூவர் பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# காலியில் மீனவ சமூகம் அனைவருக்கும் பி.சி.ஆர்.!

## தொற்று நோயியல் பிரிவு

காலியிலுள்ள மீனவ சமூகத்திலுள்ள அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை அவசியம் என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தொற்று நோயியல் நிபுணரும் வைத்தியருமான சிங்காராச்சி மேலும் கூறியுள்ளவை வருமாறு -

காலி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் குறைந்தபட்சம், ஒரு பி.சி.ஆர்.சோதனைக்காவது உட்படுத்தப்பட வேண்டும்.

மேலும், குறித்த மீனவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து வசதிகளும் சுகாதார துறையினரால் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே, பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படாத மீனவர்கள், மீன்பிடித் துறைமுகங்களுக்குள் நுழைவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

பி.சி.ஆர்.சோதனைகளை நடத்துவதில் மீன்பிடி சமூகத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்ட போதிலும், சில மீன்பிடி சமூகங்கள் நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

எதிர்காலத்தில், மீனவர்களின் தகவல்களை மீனவர் சங்கங்கள் மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்களிடமிருந்து பெறவும், பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாத மீனவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஓமந்தையில் மலசலக்கூடக் குழியில் விழுந்து 6 வயது சிறுமி பரிதாபப் பலி



(வவுனியா நிருபர்)

வவுனியா, ஓமந்தை - பன்றிக் கெய்தகுளம் பகுதியில் புதிதாக வெட் டப்பட்ட மலசலக் கூட குழியில் தவறி விழுந்த சிறுமி ஒருவர் பரிதாபமாகப் பலியானார்.

பெற்றோர் வெளியில் சென்ற நிலையில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி தவறுதலாக மல சலக்கூடக் குழியில் விழுந்துள்ளார்.

இதனை அவதானித்த சிறுமியின் உறவினர்கள் உடனடியாக சிறுமியை மீட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும், அந்தச் சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சத்தியசீலன் சஜீவினி (வயது - 6) என்ற சிறுமியே மரணமடைந்தார்.

மலசலகூடத்துக்குப் புதிதாக வெட்டப்பட்ட குழியில் மழை நீர் நிரம்பியிருந்த நிலையில் சிறுமி அதனுள் விழுந்து மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஓமந்தைப்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மட்டக்களப்பில் தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழைபெய்துவருகின்றது. இதன்காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளும் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மழை காரணமாகப் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளமையுடன் தாழ்நிலங்களில் உள்ள வீடுகளும் நீரில் மூழ்கும் நிலையேற்பட்டுள்ளது.

கடும் வறட்சிக்கு பின்னர் தொடர்ச்சியாக மழைபெய்துவரும் நிலையில் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கும் அதேநேரம் சில தாழ்நிலங்களில் உள்ள விவசாய நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் மட்டக்களப்பில் தொடர்ச்சியாக மழைபெய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தல் நிறைவுசெய்த 38 பேர் வீடுகளுக்குத் திரும்பினர்

முப்படையினரால் பராமரிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் கட்டாய தனிமைப்படுத்தல் நடைமுறையை நிறைவு செய்த மேலும் 38 பேர் நேற்று தங்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

அந்தவகையில் இதுவரை 64 ஆயிரத்து 75 பேர் தனிமைப்படுத்தல் நடைமுறைகளை இதுவரை நிறைவு செய்து தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என கொரோனா தொற்றைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் உள்ள 27 நிலையங்களில் 2 ஆயிரத்து 362 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று முதல் தொடர்புகள் இனிமேல் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்படமாட்டார்கள் என்றும் அதற்குப் பதிலாக வீட்டில் தனிமைப் படுவார்கள் என்றும் கடந்த வாரம் அரசு அறிவித்தது.

அதன்படி, தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திங்கள் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர் தொடர்பான விவரம்

இலங்கையில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) அடையாளம் காணப்பட்ட 356 கொரோனாத் தொற்று நோயாளிகள் தொடர்பான அறிவிப்பை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அந்தவகையில் திங்கள் அடையாளம் காணப்பட்டவர்களில் 193 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 99 பேர் கம்பஹாவை சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 28 பேர் களுத்துறை மாவட்டத்தையும், 08 பேர் இரத்தினபுரி மாவட்டத்தையும், 07 பேர் கண்டியையும் சேந்தவர்கள் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் மட்டக்களப்பைச் சேர்ந்த 06 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 04 பேரும், மாத்தறையில் 03 பேரும் காலியில் 02 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்தோடு போகம்பறை சிறைச்சாலையில் இருவருக்கும் அனுராதபுரம், புத்தளம் மற்றும் திருகோணமலையில் தலா ஒருவருக்கும், பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# யாழ். கரையோரப் பகுதிகளில் கடல்நீர் உட்புகுந்ததால் 85 குடும்பங்கள் பாதிப்பு





(ந.லோகதயாளன்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரையை அண்டிய சில பகுதிகளின் வீடுகளுக்குள் கடல் நீர் நேற்று உட்புகுந்ததால் 85 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் கொழும்புத்துறை ஜே 161 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள எழிலூர், மகேந்திரபுரம் கிராமங்களில் சுமார் 50 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதில் 3 குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். அத்தோடு ஜே/68 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தொடர்மாடி அருகாமை கிழக்கு பகுதியில் சுமார் 35 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதிகளை யாழ். மாட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.சூரியராஜா பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், யாழ்.மாநகர சபையின் பிரதி மேயர் து.ஈசன் மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் குறித்த பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டனர்.

## இக்கரைக்கு வந்த 18 தமிழக மீனவரும் படகுகளுடன் திருப்பி அனுப்பப்பட்டனர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , நவ.11

இந்திய மீனவர்களின் மிகப்பெரும் படகு ஒன்று சாலைக் கரையை அடைந்தபோதும் கொரோனா அச்சம் காரணமாக அந்த மீனவர்களோடு அந்தப் படகு மீண்டும் இந்தியாவிற்கே அனுப்பி வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு சாலைப பகுதியில் கரையொதுங்கிய இந்தியாவின் பாண்டிச்சேரியை சேர்ந்த பெரிய ட்றோலர் படகில் 14 இந்திய மீனவர்கள் இருந்தனர். இந்த 14 இந்திய மீனவர்களும் தரையில் இறங்கி காத்திருந்தனர். இவர்களின் படகின் இயந்திரத்தில் சிறு பழுது ஏற்பட்ட நிலையில் அது குறித்து இலங்கைக் கடற்படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

கடற்படையினர் இந்திய மீனவர்களை கண்காணித்து இந்திய மீனவர் சங்கங்களிற்கு தகவல் வழங்கினர். இந்தியாவில் இருந்து மேலதிக படகுகளில் இந்திய மீனவர்கள் வருகை தந்து படகினை சரி செய்து நேற்று மாலையில் அவர்களை படகுடன் அழைத்துச் சென்றனர். இதேநேரம் மேலும் 4 மீனவர்கள் வெற்றிலைக் கேணியில் படகுடன் கரை ஒதுங்கிய நிலையில் அவர்களும் திருப்பி அனுப்பப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## ஊரடங்கு அனுமதி பத்திரத்தை பயன்படுத்தி தனிமைப்படுத்தல் பகுதிக்கு பயணிக்க தடை!

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காலகத்தில் வழங்கப்பட்ட அனுமதி பத்திரங்களைப் பயன்படுத்தி தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்குள் பயணிக்கவோ அல்லது அங்கிருந்து வெளியேறவோ முடியாது என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்குள் பயணிக்க சிறப்பு அனுமதியைப் பெற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குச் செல்ல சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடனும் சில நிபந்தனைகள் அடிப்படையிலும் மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது. இதேவேளை அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்காகக் கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து ஊழியர்களைக் கடமைக்கு அழைப்பதற்கு சுகாதார அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் –

கொவிட் வைரஸ் தொற்று ஒழிப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட பல பிரதேசங்களில் கடுமையான பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இந்த பிரதேசங்களில் அல்லது இந்த பிரதேசங்களிலிருந்து வெளியிடங்களுக்கு பொது மக்களின் பயணங்களுக்குக் கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்காக அவசியம் தேவையான ஊழியர்களை மாத்திரம் மேலே குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து அழைக்க முடியாமை பிரச்சினையாக அமைந்துள்ளது.

இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக நாட்டின் ஏதேனும் பிரதேசங்களில் இருந்து அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்காக பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் ஊழியர்களை அழைப்பது அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் அது தொடர்பான தகவல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து அந்தந்தச் சந்தர்ப்பங்களுக்கு அமைவாக அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். – என்று கூறுப்பட்டுள்ளது.

## பரிவுணர்வுள்ள தலைவராக நாம் பார்க்கின்றோம் பைடனுக்கு காணாமலாக்கப்பட்ட உறவுகள் செய்தி!

*நன்கு அனுபவம் வாய்ந்த, பரிவுணர்வுள்ள ஒருவர் சுதந்திர உலகின் தலைவராக இருப்பதற்காக தாங்கள் காத்திருந்தனர் எனத் தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.*

*அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ஜோ பைடனுக்கு வாழ்த்துத் தெரிவித்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.*

*அத்துடன், காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்களாகிய நாங்கள், உங்கள் கவனத்தையும் எங்கள் கடினமான போராட்டத்துக்கு ஓர் ஆறுதலையும் கேட்கிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.*

*மேலும், கட்டாயப் படுத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் குழந்தைகளைக் கண்டு பிடிக்க விரைவில் ஜோ பைடனின் உதவியைக் கேட்போம் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.*

*தொடர்ந்து புதிய அமெரிக்க ஜனா திபதியை வாழ்த்தும் முகமாக நேற்று செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் பைடனின் புகைப்படத்தைத் தாங்கிய பதாகையையும் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபையின் கொடிகளையும் உறவினர்கள் ஏந்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.*

## கொரோனா சிகிச்சை நிலையம் கிளிநொச்சியில் இன்று திறப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கையில் வேகமாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக மாவட்டங்கள் ரீதியில் அமைக்கப்பட்டுவரும் வைத்தியசாலைகளில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான வைத்தியசாலை இன்று திறக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிருஷ்ணபுரம் கிராமத்தில் குறித்த வைத்தியசாலை திறக்கப்படுகின்றது.

200 படுக்கைகளுடன் கூடிய வைத்தியசாலையின் ஏற்பாட்டுப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன எனவும், இன்று முற்பகல் 11 மணிக்கு செயற்பாட்டுப் பணிகள் தொடங்கும் எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கான கொரோனாச் சிகிச்சை வைத்தியசாலை மருதங்கேணியிலும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கான கொரோனா சிகிச்சை வைத்தியசாலை மாங்குளத்திலும் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தூர இடங்களிலிருந்து வரும் யாழ். பல்கலைக்கழக பணியாளர்களுக்கு தனியான பஸ் சேவை ஏற்பாடு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலிருந்தும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வரும் பணியாளர்களுக்கென தனியான போக்கு வரத்து சேவைகள் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

பருத்தித்துறை, கொடிகாமம், தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இருந்து யாழ். பல்கலைக் கழகத்துக்கு இந்த சேவை இடம்பெறவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக பிரதிப்பதிவாளர் ம.கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்று அச்சத்தை அடுத்து, பணியாளர்கள் பொதுப்போக்குவரத்தைத் தவிர்க்கும் வகையில் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வளாகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கென வவுனியாவில் இருந்தும், யாழ்ப்பாணத்தில் இருந்தும் இம்மாத முற்பகுதியில் தனியான பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

யாழ். மாவட்டத்தினுள் பருத்தித்துறை – யாழ்ப்பாணம் மார்க்கத்தில் அச்சுவேலி, இராசவீதி, கோப்பாய் வழியாக வரும் பஸ் புலோலி சந்தியில் இருந்தும், ஏ – 9 மார்க்கத்தில் வரும் பஸ் கொடிகாமத்திலிருந்தும், காரைநகர் மார்க்கத்தில் வரும் பஸ் வட்டுக்கோட்டை சந்தியில் இருந்தும் தினமும் காலை 7 மணிக்குப் புறப்படுவதுடன், மாலையில் பிற்பகல் 4.15 மணிக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து திரும்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தை அரசு ஏற்படுத்தினால் தமிழ்த் தாய்க்குப் பிறந்தோர் அதிலிருந்து விலகவேண்டும்

## சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை அரசாங்கம் ஏற்படுத்துமானால் தமிழ் தாய்க்கு பிறந்தவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுங்கள் என மட்டக்களப்பு மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபையின் 33 ஆவது மாதாந்த அமர்வில் புதிய ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் வெற்றி பெற்ற நிலையில் அதில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தமிழ் மக்கள் வாழும் அனைத்து பிரதேசங்களிலும் காணி அபகரிப்பு மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக தமிழ் பேசும் மக்கள் ஒன்று படவேண்டு.

எமது பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதற்கு எதிராக நாங்கள் குரல் கொடுக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் இனிவரும் காலங்களில் பிரிந்து நிற்கக் கூடாது. தற்போது சிறுபான்மையினருக்கு எதிராக இந்த அரசாங்கம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

உன்மையில் நீங்கள் தமிழராக இருந்தால், தமிழ் தாய்க்கு பிறந்தவர்களாக இருந்தால், இந்த அரசாங்கம்



தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து உடனடியாக அரசிலிருந்து வெளியேற வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன். – என்றார்.

## முடக்கப்பட்ட தலாத்துஓயா நகரம் மீண்டும் வழமைக்கு திரும்புகிறது!

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூன்று நாள்கள் முடக்கப்பட்டிருந்த தலாத்து ஓயா நகரம் மீண்டும் திறக்கப் பட்டது.

அந்தப் பகுதியில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நோயாளர்கள் எட்டு பேர் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் தலத்துயோ வர்த்தகர்கள் சங்கம் எடுத்த முடிவைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை முதல் நகரத்தில் உள்ள அனைத்து கடைகளும் மூடப் பட்டிருந்தன.

இந்நிலையில் தற்போது முடக்கம் நீக்கப்பட்டவுடன், ஏராளமான மக்கள் நகரத்துக்கு வருகைதர ஆரம்பித்துள்ளனர் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். ஆகவே கடை உரிமையாளர்கள், சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளதாக வர்த்தகர்கள் அறிவித்துள்ளனர்.

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம் இன்று முதல் திறக்கப்பட உள்ளது

நாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த பிலியந்தலை – வேரஹெர மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் இன்று (புதன்கிழமை) முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளதாகத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட சேவையாள்களுடன் இந்தத் திணைக்களம் இன்று திறக்கப்படவுள்ளதாகவும், நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தொடர்ந்தும் மீள் அறிவிப்பு வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த திணைக்களத்தால், வழங்கப்படும் சேவைகளை கம்பஹா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், குருநாகல் ஆகிய மாவட்ட அலுவலகங்களின் வாயிலாக பெற்றுக் கொள்ள முடியும்மெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹொரணை ஆடைத் தொழிற்சாலையில் மேலும் 38 பேருக்குக் கொரோனா உறுதி!

ஹொரணை பகுதியிலுள்ள ஆடை தொழிற்சாலையில் புதிதாக 38 பேருக்கு கொரோனா தொற்று உதியாகியுள்ளது.

ஏற்கனவே அங்கு 159 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வந்த நிலையில், அந்த ஆடைத் தொழிற்சாலையில் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 197 ஆக அதிகரித்துள்ளது.

மேற்படி தொழிற்சாலையில் ஐயாயிரத்து 600 இற்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சதொசா நிலையம் ஊடாக கட்டுப்பாட்டு விலைக்கு அரிசி

மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் பொறுப்பிலுள்ள நெல் மற்றும் நெற்சந்தைப்படுத்தல் சபையிடம் உள்ள நெல் என்பனவற்றை அரிசியாக மாற்றி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சந்தையில் அரிசிக்கான தட்டுபாட்டையும் உத்தரவாத விலைக்கு போதுமான அரிசியை வழங்கவும் அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் முன்வராமையால் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஆகவே குறித்த அரிசியை சதொச விற்பனை நிலையங்கள் மூலம் கட்டுப்பாட்டு விலைக்கு நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இலங்கை - இந்திய...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

1977 இல் சன்சோனி ஆணைக்ழுவிற்கு எமது தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் சமர்ப்பித்த மனுவில் தமிழர்கள் தாங்கள் இலங்கையில் தங்களை தாமாகவே ஆண்ட பரம்பரை என்பதை மறக்கமாட்டார்கள். போர்த்துக்கீஸர், டச்சுக்காரர் , ஆங்கிலேயர் வந்து போனாலும் அவர்கள் இலங்கையில் ஒரு தனிப்பட்ட அலகில் ஒரு தனி இனமாக தங்களது மொழி கலாசாரங்களோடு வாழ்ந்தவர்கள். ஆகவே அவர்கள் தாம் ஒரு இரண்டாம்தர பிரஜையாவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்தமனுவில் –

தமிழரென்று சொன்னாலே, சிங்களவரிடம் தோன்றும் ஏதோ ஒருவகையான காழ்ப்புணர்ச்சியால் மிகப்பாரிய அளவு ராஜதந்திரம் (Statesmanship) இந்த இருபகுதிகளையும் ஒரு நாட்டுக்குள் வைத்திருப்பதற்கு தேவைப்பட்டது. ஆனால், அதனை இலங்கையில் சுதந்திரத்திற்கு பிறகு காண்பதற்கு அரிதாக இருக்கிறது.

தமிழர்கள் என்றுமே பிரிவினையை வேண்டியவர்கள் அல்லர். ஆனால், நடந்த சம்பவங்களால் (இது 1977 வரை) தமிழர்கள் அதற்குத் தள்ளப்படுகிறார்கள். அந்த நச்சு விவாயு எல்லாவற்றையுமே அழிக்காமல் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை கொடுத்து அதன்மூலம் அவர்கள் தாமாகவே சுதந்திர மனிதர்களாக சிங்களவர்களுடன் சேர்ந்து ஒருமித்த நாட்டை கட்டியெழுப்ப முடியுமா..? என வழிவகைகளை ஆணைக்குழு தேடவேண்டும்.

அத்தோடு சிங்கள மக்கள் தமது பரந்த எண்ணங்களாலும் மனப்பூர்வமான ராஜதந்திரங்களாலும் ( Statesmanship ) தமிழர்களை தங்களது சகோதரர்களாக கருதி, ஒரு நாட்டை கட்டியெழுப்ப உழைப்பார்களா..? என்பதை அவர்கள் தம் நெஞ்சங்களில் சிந்திக்கவேண்டியது. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். தமிழர்கள் தங்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு முகம்கொடுக்க ஏதோ ஒரு வழியில் எதிர்ப்புக்காட்டுவார்கள். அதனால் இந்த இனப்பிரச்சினை முடிவற்று நீளும்.– என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனுக்கள் அன்று சன்சோனி ஆணைக் குழுவுக்கு ஒரு அரசியல் கட்சி சார்ந்தோ அல்லது அரசியல் நோக்கங்களுக்காகவோ சமர்ப்பிக்கப்பட்டவை அல்ல. அன்று தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தினரோடு இதுவிடயத்தில் உதவியாக உழைத்த பல தமிழ் , சிங்கள, முஸ்லிம் புத்திஜீவிகளின் ஒன்றிணைந்த சமர்ப்பணம். ஆனாலும் அந்த ஆணைக்குழுவின் முன்னால் பொலிஸ் மற்றும் படையினருக்கு எதிராக வைக்கப்பட்ட சாட்சியங்களின் நெருக்கடியினால் 1983 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு கலவரம் உருவானது. சிங்கள மக்களின் ஏகோபித்த குரலாகவும் அது பார்க்கப்பட்டது.

இவ்வரலாற்றினாலும் அதன் பெறுபேறாக இந்தியாவின் ஆதரவாலும் தங்களது அரசியல் தாகம் , தமிழர்களின் சுயநிர்ணய அடிப்படையில் அமையும் சுதந்திர தமிழீழமே. இது எப்பொழுது சிங்களத்துடன் இணைந்து வாழ்வது ஒருவிதத்திலும் சாத்தியமற்றது என்று காணப்படுகிறதோ அப்பொழுது அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று புலிகள் தங்கள் பேச்சுவார்த்தைகளின்போது பிரேமதாசவுக்கு கூறினார்கள்.

அதேசமயம் இன்னுமொரு புறத்தில் சமகால கட்டத்தில் வரதராஜப்பெருமாள், பிரேமதாஸவின் நிலைப்பாடு காரணமாக ஒரு தலைப்பட்சமான சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு இந்தியாவுக்கு பாதுகாப்பாகச் சென்றார்.

இந்தியாவின் பிராந்திய வல்லரசு நிலைப்பாட்டை மீறி, அதன் அனுசரணையின்றி, ஒரு தமிழீழப்பிரகடனமோ அன்றி சுயநிர்ணய உரிமை கோரலோ நடைமுறை சாத்தியமா என்பதனை நாங்கள் நடந்தவற்றை, நடப்பவற்றை கணக்கெடுத்து எங்களிடையே தீர்மானித்தல் வேண்டும்.

ஜே.ஆர். அமெரிக்க ஜனாதிபதி ரீகனை தன்னுடைய ஞானத்தந்தையாக பார்த்தவர். அவருக்கு ரீகன் தனது பிரதிநிதி டக்ளஸ் வோல்டேர்ஸ் மூலம் அனுப்பிய செய்தி ‘தயவுசெய்து நீங்கள் இந்தியாவுடனேயே பேசித்தீருங்கள்’ என்பதே.

ஆகவே தமிழர்களுக்கு ஒரு சுயாதீனமான வல்லமை உண்டா என்பதையும் விரலுக்குத் தக்க வீரம் என்ற பழமொழியையும் உணர்தல் வேண்டும்.

ஆகவே மோடியின் பா.ஜ.க. அரசு தற்சமயம் தூசுதட்டி எடுத்ததற்கும் ஒப்பந்தத்தின் அமுலாக்கப்படாத ஷரத்துக்கள் தமிழரின் இன்றைய நிலையில் அவர்களின் அபிலாகைளுக்கோ அன்றில் விமோசனத்துக்கோ போதுமானவையா என்பது அவர்களோடு ஒருமித்த அணுகுமுறையில் பேசப்படவேண்டியது. அந்த யதார்த்தங்களை எங்களுக்குள்ளேயே நாங்கள் தீர்க்காமல் பல உருப்படிகளை போட்டு சங்கீதமாக்க முடியாது.

தனது பிராந்திய நன்மைக்காகவாகிலும் இந்தியா தரக்கூடிய அனுசரணையில் ஒரு புதிய அத்தியாயத்திற்குல் காலூன்ற வேண்டிய அடிப்படை நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ளவேண்டும்.

ஒருவிரல் ஊன்றக்கேட்டு, அந்த விரலில் இருந்து உலகையே அளந்து மூன்றாம் அடியில் தலைமேல் கால் பதித்த பெருமாளின் கதை எங்களுக்குத் தெரியும்.

1987 இன் ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் தமிழர் பிரதேசமாக வரக்கூடிய மாகாணங்களில் எந்தெந்த கிராமங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதில் சர்ச்சைகள் இருந்தன. ஜே.ஆர். , திருகோணமலையில் பல சிங்களவர்கள் இருப்பதனால் அதனை தமிழ் மாகாணத்துக்குள் அடக்கமுடியாது அப்படியானால், ஜெருசலேம் போன்று இருதரப்புக்கும் பொதுவாக அன்றில் திருகோணமலையை சிங்களப்பகுதியாக பிரித்து அருகிலிருக்கும் சிங்கள மாகாணத்தோடு இணைக்கவேண்டும்.– என்றார்.

அப்போது தமிழர் விடுதலைக்கூட்டணியினர், 1948 சுதந்திர காலத்திலிருந்த குடிசனப்புள்ளி விவரங்களின் அடிப்படையிலிருந்து, மாகாணங்கள் அமையவேண்டும். என்றனர்.

அதே நிலைமை அம்பாறைக்கும் இருந்தது. பின்னர் ஜே.ஆர். – ராஜீவ் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ( அவர் நேபாலில் நடந்த சார்க் மாநாட்டை முடித்துக்கொண்டு டெல்லி சென்ற சமயம்) அதனை 1955 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் அமைக்கலாம் என்று இணங்கப்பட்டது.

ஆனால், இன்றோ அவை போக , மணலாறு , முல்லைத்தீவு, வவுனியா முதலான பிரதேசங்களின் அடையாளங்களே மாறியிருக்கின்றன. இனிமேல் காணி அதிகாரத்தை தரவேண்டும் என்று எஞ்சியிருக்கும் ஷரத்தை புரிந்துகொள்ளாமல், தமிழ்ப்பிரதேசங்களை பூர்வீக பிரதேசமாக எடுப்பதற்கும் அப்பிரதேசங்கள் உள்ளடக்கப்படவேண்டும் என்பதில் திடசித்தம் வேண்டும்.

தற்சமயம் வெளிவிவகார அமைச்சராகவிருக்கும் ஜெயசங்கர் மற்றும் முன்னைய இந்திய தூதரகத்தின் செயலாளர் ஹர்தீப்பூரிக்கும் ஒப்பந்தததின் சங்கடங்களில் நிறைய நேரடித் தொடர்புண்டு. தமிழர்கள் மீது அவர்களுக்கு அனுதாபமும் உண்டு.

அந்த அணுகுமுறைகளை விட்டு, அதே சம்பந்தன் 20 ஆம் ஷரத்தின் வாக்குவாதத்தில் நாட்டை பிரிக்க நாமொருபோதும் அனுமதியோம் என்று சூளுரைப்பது எங்களை எந்தப்பாதையில் எடுத்துச் செல்லும் என்பதையும் தீர்மானிக்கவேண்டும்.

அதைத் தொடர்ந்து இந்தியத்தூதுவர் சம்பந்தனை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார். அவற்றின் விவரங்கள் வெளிவராதபோதும், சில செய்திகளில், இந்தியத் தலையீடு, அதன் பங்களிப்பு எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதை தெளிவுபடுத்துங்கள், முன்னுக்குப்பின் முரணான செய்தியைத் தராதீர்கள், ஒருமித்த ஒரு தலைமையை தாருங்கள் என்றிருந்தது.

கடந்த 33 வருட கால வரலாற்றின் பின்னணி நடப்புகளிலிருந்து, தமிழர் தங்கள் விடிவுக்கான வழியைக் கண்டடைதல் வேண்டும்.

( முற்றுப் பெறாத வரலாறு )

காலைக்கதிர் Kalaikkathir

# விவசாயத் துறையை மேம்படுத்த 400 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு!

மூன்றுவருடகாலத்துக்குள்கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் ஆகிய உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கும், விவசாயத்துக்குத் தேவையான விதைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யவும் மாத்தளை மாவட்டத்தில் விவசாயத்துறையை மேம்படுத்த 400 கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்யவும் வாழ்வாதார மேம்பாட்டு குழு தீர்மானித்துள்ளது.

கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்துக் கமைய செயற்படும் வாழ்வாதார மேம்பாட்டுக்குழுவின் முதலாவது கலந்துரையாடல் மாத்தளை மாவட்டத்தில் இடம்பெற்றது.

பொருளாதார புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் மேற்பார்வையின் கீழ் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

குழுவில் உள்ள அமைச்சர்கள் மாத்தளை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி தொடர்பில் கொள்கைத் திட்டங்களை பின்வருமாறு முன்வைத்தனர்.

**சுற்றுலாத்துறை**

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம், கொவிட்-19 வைரஸ் தாக்கம் உள்ளிட்ட காரணிகளால் சுற்றுலாத்துறை சேவை வீழ்ச்சியடைந்துள்ளது.

சுற்றுலாத்துறை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாத்தளை மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுற்றுலாத்துறை அமைச்சால் 2 கோடி ரூபா நிதியும், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சால் 75 கோடி ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மொரஹாகந்த நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் சுற்றுலாத் தளத்தை ஸ்தாபிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 500 ஹெக்டெயர்நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

**விவசாயத்துறை**

விதை உற்பத்தியை வினைத்திறனான முறையில் செயற்படுத்த பாரிய செயற்றிட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பெரிய வெங்காய விதையை தம்புள்ளையிலிருந்தும், உருளைக் கிழங்கு விதையை நுவரெலியாவிலும், பச்சை மிளகாய் விதையை கண்டி உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களிலும் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் காப்புறுதி நடவடிக்கை சிறந்த முறையில் செயற்படுத்தவும், காப்புறுதி தொகை ரூபா 2 லட்சத்தால் அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 3 வருட காலத்துக்குள், கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றை இறக்குமதி செய்வதை நிறுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



உள்ளூர் விதை உற்பத்திக்காக 75 கோடி ரூபாவும், மாத்தளை மாவட்டத்தில் விவசாயத்துறையை மேம்படுத்த 400 கோடிரூபாவும் ஒதுக்கப்படுவதாகவும், தம்புள்ளை உர களஞ்சியசாலை உருவாக்கத்துக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.

**வனஜீவராசிகள்**

மாத்தளை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் யானை - மனித மோதல் தீவிரமடைந்துள்ளது. இந்த மோதலைத்தடுக்கமின்வேலிஅமைப்பதற்கு 2 கோடியே 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மனிதர்களையும், வன விலங்குகளையும் பாதுகாக்கும் நடவடிக்கைகள் அனைத்து தரப்பினரது ஒத்துழைப்புடனும் முன்னெடுக்கப்படும் என வனஜீவராசிகள் அமைச்சர் சி.பி. ரத்னாயக்க தெரிவித்தார்.

## கொரோனா குணமடைவு 9 ஆயிரம் கடந்துள்ளது!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அந்தவகையில் கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 657 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது. நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 537 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனாத் தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 715 ஆக காணப்படுகின்றது. இதில் 5 ஆயிரத்து 137 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 419 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர். மேலும் இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 41 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அங்காடி வியாபாரத்துக்கு யாழ்ப்பாண நகரில் தடை!

### முதல்வர் அதிரடி

யாழ்ப்பாணம்மாநகருக்குள்பண்டிகைக்கால அங்காடி வியாபாரம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவரால் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வழமையாக யாழ்ப்பாணம் மாநகரசபையால் அனுமதிக்கப்படும் 'பண்டிகைகால அங்காடி' வியாபாரத்துக்கு இந்த வருடம் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என முதல்வரின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 வைரஸ் பரவல் மற்றும் தாக்கங்களிலிருந்து பொது மக்களைப் பாதுகாப்பது தமது கடமை எனவும், தம்மால் முன்னெடுக்கப்பட்டுவரும் முன்னாயத்த நடவடிக்கைகளின் தொடராக சுகாதாரத்துறையினர், மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களைக் கருத்திற்கொண்டு பண்டிகைக்கால அங்காடி வியாபாரம் முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது எனவும் முதல்வரின் ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது தடையைமீறியாரேனும்நடைபாதைகளில், வீதியோரங்களில், யாழ் நகர்ப்பகுதிகளில் மற்றும் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை தொடர்பாக எமது மாநகர வருமான வரிப் பரிசோதகர்களால் அடையாளப்படுத்தப்படுமிடத்து அந்த விற்பனைப் பொருள்கள் மாநகரசபையால் கையகப்படுத்தப்படுவதுடன் அவை மீள ஒப்படைக்கப்படமாட்டா என யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

மேலும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட உரிய நபர்கள் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மிகுந்த வருத்தத்துடன் அறியத்தருவதாகவும் யாழ். மாநகர முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மாநகர குடியிருப்பாளர்கள், பண்டிகைகால நடைபாதை வியாபாரிகள், வெளிமாவட்ட பண்டிகைகால அங்காடி வியாபாரிகள் என அனைவரும் இந்த விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் என யாழ். மாநகர முதல்வர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 08 1928

மறைவு 10 11 2020

அமரர்

**சட்டத்தரணி டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்**

**யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வசித்தவரும், தற்போது கொழும்பு வெள்ளவத்தை W.A. சில்வா மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான பிரபல சட்டத்தரணி டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (10/11/2020) இயற்கை எய்தினார்.**

**அன்னார் அமரர்கள் வைத்திலிங்கம் சபாபதி - ராஜமணி தம்பதியினரின் மகனும், அமரர்கள் தியாகராஜா - அன்னம் தம்பதியினரின் மருமகனும், அமரர் ராஜமாணிக்கம் அவர்களின் அன்புக் கணவரும், அமரர்கள் காந்திமதி, புனிதவதி, வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர்கள் விநாயகமூர்த்தி, ராஜதுரை, ராஜகுணம், ராஜமலர், மற்றும் ராஜசெல்வம் ஆகியோரின் மைத்துனரும், சேரலாதன், அமரர் பிரகலாதன், தயாபரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நிரஞ்சன் நந்தகோபனின் மாமனாரும், ஸ்ருதி, சுந்தர ரமணன் ஆகியோரின் தாத்தாவும், ஸ்ரீசக்திவேல், ஸ்ரீமயூரன், அமரர் ஸ்ரீஜெகதேவி மற்றும் ஸ்ரீரஞ்சனி ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக் கிரியைகள், இன்று புதன்கிழமை 11.11.2020 காலை 10.00 மணியளவில் தெகிவளை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**தகவல் - குடும்பத்தினர்**

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
• பிரான்ஸ் • ஜெர்மனி • டென்மார்க் • நெதர்லாந்து • இத்தாலி • சுவிஸ்
1150/= Kg

எமது தொடர்பிலைகள்
0768226240

கல்யாணமாலை
வட. சர்வதேச திருமண சேவை
மணமகள் விபரம்
பிறந்த திகதி - 1983.02.26
மதம் - இந்து A ஆசாரி
நட்சத்திரம் - மகம்
பாவம் - 44 1/4
கல்வி - AL
தொழில் - அமெரிக்கா PR
விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்.
மணமகள் விபரம்
பிறந்த திகதி - 1994.04.19
மதம் - இந்து A ஆசாரி
நட்சத்திரம் - பூசம்
பாவம் - 50
செவ் - 1 இல் 32 புள்ளி
கல்வி - கனடா பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - சமமான ஆங்கிலப் புலமையும் பட்டதாரி மணமகன் தேவை.
Kalyanamalai Vada.com
உப அலுவலகம், சந்தை வீதி, இளையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

## கொரோனாவுக்குப் பின்னரான உலகம் இயற்கைக்கான தருணம்

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 1-30, 2020




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir